பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 16 சனிக்கிழமை (30.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 185

# வன்னி மோதல்களில் 20,000 தமிழ் மக்கள் பலி!

## ஐ.நா. ஆவணங்களை வைத்து லண்டனின் 'த ரைம்ஸ்' தகவல்

லண்டன், மே 30

**வன்னியில் இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களில் ஜனவரி மாதத்துக்குப் பின்னர் 20 ஆயிரம் பொதுமக்கள் பலியாகியிருக்கின்றனர் என்று பிரிட்டனின் 'த ரைம்ஸ்' பத்திரிகை அதிர்ச்சிகரத் தகவலை வெளியிட்டுள்ளது.**

**ஐ.நா. வட்டாரங்களையும் அதன் பகிரங்கப்படுத்தப்படாத ஆவணங்களையும் அடிப்படையாக வைத்து இந்தத் தகவலை 'த ரைம்ஸ்' வெளியிட்டுள்ளது.**

இலங்கை அரசு சாட்சியமற்ற யுத்தத்தை நடத்தியதாகவும், என்ன நடைபெற்றது என்பதை சொல்வதற்கு எவரும் இருப்பதை அரசு விரும்பவில்லை என்றும் ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்தன என குறிப்பிட்டுள்ள 'த ரைம்ஸ்' மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஐ.நாவின் இரகசிய ஆவணங்கள், தாக்கு

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி அடுத்தவாரம் இந்தியாவுக்குப் பயணம்

புதுடில்லி, மே 30

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் புனர்வாழ்வு குறித்து ஆராய்வதற்காகவே மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார் என்று புதிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எம்.எல்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

"இலங்கை ஜனாதிபதி அடுத்தவாரம் இந்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 'ஏற்றுக்கொள்ளமுடியாத அளவு' மனித அழிவு நடந்திருக்கிறது உத்தியோகபூர்வ விசாரணை மிக அவசியம் என்கிறார் ஹோம்ஸ்



நியூயோர்க்,மே30

இலங்கையில் (வன்னியில்) தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை நசுக்கும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்ட போரின் போது கொலையுண்ட பொது மக்களின் எண்ணிக்கை "ஏற்றுக் கொள்ள முடியாதளவுக்கு" மிக அதிகமாக உள்ளது. ஆகையால் அது குறித்து உத்தியோக பூர்வமான விசாரணை நடத்தப்படுவது மிகவும் அத்தி யாவசியமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் சேர் ஜோன் ஹோம்ஸ்.

போரின் இறுதி நாள்களில் ஆயிரமாயிரமாக பொதுமக்கள் இறந்துள்ளனர். அந்த வேளை இலங்கை இராணுவம் கடற்கரைப் பகுதியில் அமைந்த பாதுகாப்பு வலயத்தின் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்கியதாகக் கருதப்படுகிறது.

இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழும் போது - இருதரப்புகள் மீதும் குற்றச்சாட்டுகள் எழும்போது - அது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது அந்தச் சம்ப

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்படவில்லை; 'ரைம்ஸ்' பத்திரிகைச் செய்திக்கு அரசு மறுப்பு

கொழும்பு, மே 30

பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற மோதல்களின்போது 20 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'த ரைம்ஸ்' பத்திரிகை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் முரளிதரன் விரைவில் யாழ்.வருவார்

கொழும்பு, மே 30

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அலுவலகம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட இருக்கின்றது.

அக்கட்சியின் உப தலைவரும் அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் உள்ள சில தமிழ் பிரமுகர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிராக நான் முன்னெடுத்த போராட்டம் இந்தியாவின் போராட்டமே; அந்நாடு நினைப்பதே எனக்கு முக்கியம்

### 'த வீக்' சஞ்சிகைக்கு ஜனாதிபதி பேட்டி



கொழும்பு, மே 30

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'தவீக்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்ட வாறு கூறினார்.

இந்தியா என்ன நினைக்கிறது என்பதை விட வேறு எதுவும் எனக்கு முக்கியமில்லை. நான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னெடுத்த போராட்டம் இந்தியாவின் போராட்டமே.

எமது இராணுவ வெற்றிக்காக தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலர் என்னைப் பாராட்டியுள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 200 புலி உறுப்பினர்கள் வவுனியா முகாமில் இனங்காணப்பட்டதாக ஐ.நா.தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, மே 30

வவுனியா அகதி முகாம்களில் இருந்து இதுவரை 200 புலி உறுப்பினர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் சிலர் பெற்றோரிடமும் சிலர் புனர்வாழ்வு முகாமுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் இலங்கையிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியின் உள்ளூர் முகவர் உருமாறன் வவுனியா முகாமில் கைது என அறிவிப்பு

கொழும்பு, மே 30

விடுதலைப் புலிகளின் சர்வதேச இணைப்பாளரான கே.பி எனப்படும் குமரன்(செல்வராசா) பத்மநாதனின் உள்ளூர் முகவர் வவுனியா முகாம் ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர் தொடர்பாக அங்கிருந்த மக்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக்

(16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில கற்கை நெறிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 33 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட 33 பேருக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 2ஆம் திகதி மு.ப. 9மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளதென்று பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

எம்.எம்.டொமல்ரிடா-பண்டத்தரிப்பு, ஏ.அஷானி-கொக்குவில் மேற்கு, ரி.துரேந்திரா-சித்தன்கேணி, எம்.எம். என்.மெனிஷியா-யாழ்ப்பாணம், பி.யசோதினி- கோப்பாய், கே.கிருஷ்ணசாந்தினி- யாழ்ப்பாணம், பி. தில்லைவனஜா - மீசாலை, என். டார்ஷி-சங்கானை, எஸ்.ரமியா- நீர்வேலி, ஏ.சர்மினி-யாழ்ப்பாணம், ஜி.பிரவினா- சாவகச்சேரி, இ.ஜே.ஆன் சில்விக்ஸ் தயாழினி- பண்டத்தரிப்பு, ரி.தாரணி- பருத்தித்துறை, என்.உஷா-காரைநகர், எஸ்.துவாரகா-மல்லாகம், எஸ்.ரம்யா - சண்டிலிப்பாய், கே.லக்ஷனா - வல்வெட்டித்துறை, எஸ்.சியாமலி - கல்கிசை, எஸ்.ஜான்சி - யாழ்ப்பாணம், எஸ்.பாரதி - பருத்தித்துறை, யு.மிதுஷா - நல்லூர், ரி.நிருபாலினி- கரவெட்டி, எஸ்.கீர்த்தனா- சுன்னாகம், ரி.நிதர்ஜா-வல்வெட்டித்துறை, கே.விக்னேஸ்வரி-யாழ்ப்பாணம், ஜே.ஜெயசுதன்-சங்கானை, எஸ்.ஆனந்தினி - கோப்பாய், ஹேமாலஷ்மி-வல்வெட்டித்துறை, ரி.வினோதயனி- கரவெட்டி, வி.கீதாசினி- பண்டத்தரிப்பு, எம்.சந்துரு-உரும்பிராய், எம்.பாலஷர்னி- அரியாலை, ரி.தனாசனி- இணுவில்.

## கடைசி பஸ் சேவை திங்கள் முதல் மாலை 6 மணிக்கு

யாழ்ப்பாணம், மே-30

யாழ்.மத்திய பஸ்நிலையத்தில் இருந்து சகலபாதைகளிலும் கடைசி பஸ் சேவை மாலை 6 மணிக்கு இடம்பெறும் என்று போக்குவரத்துச் சபை பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இந்த நேர மாற்றம் நடைமுறைக்கு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரைகாலம் மாலை 5.30 மணிக்கே கடைசி பஸ் சேவை இடம்பெற்று வந்தது.(1)

# மிருசுவில் நலன்புரி நிலையம் வரை ஏ-9 பாதையில் பஸ் சேவை நீடிப்பு

யாழப்பாணம், மே 30

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வரை நடத்தப்பட்டு வரும் 769 மார்க்க பஸ் சேவை மிருசுவில் தேவாலயம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி கடந்த 2006ஆம் வருடம் போக்குவரத்து நிறுத்தப்பட்டதையடுத்து கொடிகாமத்துக்கு அப்பால் ஏ-9 வீதி வழியாக எந்தவொரு வாகனமும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள விடத்தற்பளை, உசன்,கெற்பேலி, மிருசுவில், தவசிகுளம், மிருசுவில் வடக்கு ஆகிய பகுதிகளில் மக்கள் குடியமர்ந்துள்ள போதிலும் இப்பகுதி மக்கள் கொடிகாமத்திற்கு நடந்தும் வாகனங்களில் வந்தும் தமது பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது மிருசுவில் பகுதி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரை பார்வையிட வருவோரின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்தும் தென்மராட்சிக் கிழக்குப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் மிருசுவில் தேவாலயம் வரை போக்குவரத்து சேவை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(1-207)

# யாழ். ஆஸ்பத்திரியில் அமைய ஊழியர்கள் 38 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக அமைய அடிப்படையில் பணியாற்றிய சிற்றூழியர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டுள்ளனர்.

தற்காலிகமாக பணியாற்றிய 38 சிற்றூழியர்களே நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்களை சுகாதார அமைச்சு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிரந்தர நியமனம் பெற்றவர்களுக்கான இந்த நியமனக் கடிதங்கள் இவ்வாரத்தில் வழங்கப்படவுள்ளன.

(1-224)

# கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான பதிவுகளை ஜுன் 15க்கு முன் மேற்கொள்ள அறிவுறுத்து

அச்சுவேலி, மே 30

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டு இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் ஜுன் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கான போக்குவரத்து வசதியீனம், பயண ஒழுங்கு மற்றும் நிலைமைகளை கருத்தில் கொண்டு பதிவு செய்வதற்குரிய காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பீடாதிபதி கே.யோகநாதன் வ... நருகையில் -

...ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தமது பதிவுகளை மேற்கொண்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை பதிவுகளை மேற்கொள் ளாத மாணவர்கள் அது தொடர்பாக அறி வித்துள்ளனர்.

இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் மாணவர்கள் ஜுன் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது உறவினர்களுடன் அலுவலக நேரத்தில் வருகை தந்து தமது பதிவுகளை மேற்கொள்வதற்கு தமது அனுமதியை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

(1-11)


## லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள (லண்டன்) உள் துறை அலுவலகத்தால் 'A' தரத்தில் பட்டியலிடப்பட்ட தலைசிறந்த, நீண்டகால வரலாற்றையுடைய பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கை நெறிகளுக்கு அனுமதி.

குறைந்த கட்டணச்சலுகைகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள், தங்குமிடவசதி ஏற்பாடு கள், பகுதிநேர வேலைக்கான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை (ஒவ்வொரு ஞாயிறும்) காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நேரில் சந்திக்கலாம். ஏற்கனவே சந்தித்தவர்கள் தங்களிடம் கோரப்பட்ட விவரங்களுடன் நாளை (ஞாயிற்றுக்கிழமை) வரவும்.

உடன் தொடர்புகளுக்கு :-

தொ.பே.0212223818,

எந்த நேரமும் தொடர்புகொள்ள 0774528818

E.Mail : mg 1404_2009@ yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். ( யுனிசெவ் முன்பாக)


## முன்பள்ளிச் சிறார்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,மே 30

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி சங்கத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் சிறார்களுக்கு நேற்று சீருடைகள் வழங்கப்பட்டன.

சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் கி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு முன்பள்ளி சிறார்களுக்கு சீருடைகளை வழங்கினார்.

நான்கு முன்பள்ளிகளைச் சேர்ந்த 75 சிறார்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன.

(1-207)


**வேலை வாய்ப்பு** கணனி அனுபவமுள்ள போட்டோசொப் தெரிந்த பெண்பிள்ளை தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு.
அம்மா டிஜிற்றல் வீடியோ&போட்டோ,
இல: 28,வேம்படி வீதி, யாழ்ப்பாணம். T.P 0777 111530

**கணனி விற்பனைக்கு**
பாவித்த தரமான P4 கணனிகள் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0778392098

**விற்பனைக்கு: L300** (டீசல் வான் - 29,0000), Delica (பெற்றோல்வான் 200000) p4 Com- puter (Fullset), வாட்டர்பம் (வில்லியர்ஸ் 25), காஸ் குக்கர், CD Set (panasonic)
தொடர்பு: ...
N.18, ... யாழ்ப்பாணம், தொ.பே. 9201


## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் கிருஷ்ணராஜா

(யாழ்.பல்கலைக்கழக தற்போதைய கலைப் பீடாதிபதியும் முன்னாள் மெய்யியல் துறைத் தலைவரும்)

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா அவர்கள் நேற்று (29.05.2009) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் அறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.கதிர்காமநாதர் (மைத்துனர், அதிபர், அ.மி.த.க. பாடசாலை, வர்த்தலைவிளான்)

### திருமதி பொன்னுத்துரை வரலட்சுமி



பெரிய பளையைப் பிறப்பிடமாகவும், உசனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை வரலட்சுமி நேற்று (29.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், நடேசலிங்கம் (ஆசிரியர், யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயாரும், சோபனாவின் (ஆசிரியர், யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) அன்பு மாமியாரும், விசாகன், கரிகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2009) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை,
உசன், மிருசுவில்.

தகவல்:
பொ.நடேசலிங்கம் (மகன்)

### மாணிக்கம் தில்லைவிநாயகம்

(ஓய்வுபெற்ற ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்)



பளை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தில்லைவிநாயகம் 27.05.2009 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், தேவராணியின் அன்புக் கணவரும், சசிதரன், சசிக்குமார், ஜெயகுமாரி, சுரேஸ்குமார், ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனீற்றா, திருக்குமாரன், ஜெயச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும், சறுனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா பாலசிங்கம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, கலட்டி 49/5, சீனியர் ஒழுங்கையைச் சேர்ந்த கந்தையா பாலசிங்கம் நேற்று (29.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, இராசம்மா, வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2009) சனிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

49/5, சீனியர்லேன்,
கலட்டி.

தகவல்:-
மா.கைலாசபதி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி.ஐயாத்துரை பொற்கொடி

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும், தற்போது குமரகோட்டத்தை வசிப்பிடமாக வும் கொண்ட ஐயாத்துரை பொற்கொடி நேற்று (29.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், இராசையாவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் சகோதரர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

தகவல்
மு.அமிர்தலிங்கம்.

### மகேந்திரன் கோபிநாத்

(2 ஆம் வருட மின்னியல் பொறியியல் மாணவன்)

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் கோபிநாத் 28.05.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை 8 மணியளவில் நடைபெற்று, மு.ப. 10 மணிக்கு தகனம் செய்யப்படும்.

கருங்காலி, காரைநகரில் உள்ள சகோதரரான தம்பையா பேரம்பலம் வீட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்

தகவல்: அருணாசலம் மகேந்திரன்
(ஆசிரியர் - தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வாக்கெடுப்புக்கு விடப்பட்ட நீதி!

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தனக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையை முறியடித்த வெற்றிக் களிப்பில் துள்ளிக் குதித்துக் கொண்டாடுகின்றது கொழும்பு.

ஆனால் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அந்த முடிவை 'வெட்கக் கேடானது', 'கொள்கை அடிப்படை ஏதும் அற்றது', 'மிக மோசமான முன்னுதாரணம்' என்றெல்லாம் அதிர்ச்சியுடன் விவரிக்கின்றனர் - விமர்சிக்கின்றனர் - சர்வதேச நடுநிலை நோக்கர்கள்.

இலங்கை விவகாரத்தில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் இந்தச் செயற்பாடு, மனித உரிமைகளைப் பூகோள ரீதியில் நிலைநிறுத்துவது தொடர்பான அதன் பங்கு பணியை சந்தேகத்துக்கு இடமின்றிக் கேள்விக் குள்ளாக்கியுள்ளது.

இலங்கை விவகாரத்தில், அங்கு இடம்பெற்றவை என முறையிடப்படும் மிக மோசமான மனிதப் படுகொலைகள், இனவழிப்பு நடவடிக்கைகள் போன்றவை குறித்து விசாரணை செய்வதற்கு ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் பின்னடித்து விலகிக் கொண்டது மட்டுமல்லாமல், அதற்கு அப்பாலும் போய், அங்கு இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்களை மூடி மறைத்து, அங்கு நடந்தவற்றுக்குப் பாராட்டும் தெரிவிக்கும் நிலைக்கும் சென்றிருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் கடந்த ஐந்து மாதங்களில் பல்லாயிரக் கணக்கில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படவும் பல்லாயிரம் பேர் அங்கங்களை இழந்து மோசமாகப் படுகாயமடையவும் காரணமான போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக தேசங்கள் கோர, அந்தப் பிரேரணையை தோற்கடித்த கவுன்ஸிலின் உறுப்பு நாடுகள், அக் கோரிக்கைக்கு மாறாக, அந்த யுத்த களத்தில் இலங்கை அரசுப் படைகள் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளைப் பாராட்டிப் போற்றும் தீர்மானத்தை நிறைவேற்றி 'சாதித்து'க் காட்டியிருக்கின்றன.

மனித உரிமைகள் விடயத்தை சர்வதேச ரீதியில் நிலைநாட்டி, மேம்படுத்தும் பணியை முன்னர் 'ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு'வே கவனித்து வந்தது. ஊழல், செயற்றிறனின்மை போன்றவற்றால் அந்த அமைப்பு நலிந்து கிடந்தமையை அடுத்து, மனித உரிமைகளை நிலைநிறுத்தும் விடயங்களுக்கு புது உத்வேகம் அளிக்கும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டு தற்போதைய 'ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில்' என்ற கட்டமைப்புச் செயற்பாடு கொண்டுவரப்பட்டது.

ஆனால் வெளிப்படையாகவே சுமார் இருபதாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொன்றொழிக்கப்படக் காரணமான போர்க் குற்றங்களின் அடிப்படை குறித்து விசாரிக்க கூட லாயக்கற்றது என்று மட்டுமல்லாமல், அத்தகைய போர்க் குற்றங்களாக வர்ணிக்கப்படக்கூடிய அம்சங்களைப் போற்றும் செயற்பாடாகப் பாராட்டும் அளவுக்கு அந்தக் கட்டமைப்பு சென்றிருப்பது இவ்விவகாரத்தில் அதன் மோசமான - பயனற்ற - நம்பகத்தகுதியற்ற - நிலையைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுவதாக சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றார்கள்.

''ஐ.நா.போன்ற மேன்மையான கௌரவமுடைய அமைப்பின் உயர்சபை ஒன்று நிறைவேற்றிய மிக மோசமான, வெட்கக்கேடான, அடிப்படை ஏதுமற்ற தீர்மானம் இதுவாகத்தான் இருக்கும். 1939 இல் போலந்து மீது தான் நடத்திய சட்டவிரோத - இனவழிப்பு - ஆக்கிரமிப்பை 'யூதர்களின் விடுதலையாக' நாஸி ஆட்சிப்பீடம் அர்த்தம் பண்ணியமையை ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் பாராட்டுவதற்கு ஒப்பானது இப்போது இலங்கையில் 'தமிழ் மக்களின் விடுதலைக்காக' கொழும்பு அரசு எடுத்த இராணுவ நடவடிக்கையைப் பாராட்டுதல் ஆகும்.' - இப்படி சர்வதேச சட்டத்துறை அறிஞர் ஒருவர் விசனத்துடன் கூடிய விமர்சனத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

மோசமான போர்க்குற்றங்கள் போன்ற மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்து விசாரிப்பது, குற்றத் தீர்மானத்தை மேற்கொள்வது, தண்டனை வழங்குவது, அதைச் செயற்படுத்துவது போன்றவை அவ்விடயங்களுக்கு ஆதரவு தெரிவிப்போரின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிப்பவையாக அமையக்கூடாது. சட்டம், இயற்கை நீதி, மனித விழுமியங்கள், மனித உரிமைகள் போன்றவற்றை சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் அடிப்படையில் அவை தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஆட்சி முறையைத் தீர்மானிப்பது வேண்டுமானால் எண்ணிக்கையின் அடிப்படையில் - ஜனநாயக முறையில் (அதுதான் ஜனநாயகத்தின் கேலிக்கூத்துமாகும்) அமையலாம். ஆனால் நீதி நிலைநாட்டப்படுவது என்பது - நீதி பரிபாலனம் என்பது - செயற்பாடுகளை சட்ட மற்றும் மனித விழுமியங்களின் அடிப்படையில் அளவிடுவதன் மூலம் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும். இழைக்கப்பட்ட செயற்பாடுகள் குற்றங்களா, இல்லையா என்பதை அவற்றுக்கு ஆதரவான வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்க முயல்வது, அநீதியானது; கேலிக்கூத்தானது. அதைத்தான் வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதா என்ற விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலும் செய்திருக்கின்றது.

நீதிமுறையான செயற்பாடுகள் மூலமே நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும். வாக்கெடுப்பு மூலம் அல்ல.

வாக்கெடுப்பு மூலமே நீதி நிலைநாட்டப்படலாம் என்றால், பெரும்பான்மையினர் புரியும் அநீதி எல்லாம் எப்போதுமே 'நீதியாக' அர்த்தம் பண்ணப்படவேண்டியதாகிவிடும்.

பூகோள ரீதியாக மனித உரிமைகளைப் பேணி, நிலைநாட்டி, மேம்படுத்துவதில் 'ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில்' செயற்றிறனற்ற - பயனற்ற - கட்டமைப்பாகி விட்டது என்பதை இலங்கை விவகாரத்தில் அதன் கேலிக்கூத்துச் செயற்பாடு நிரூபித்து விட்டது.

இந்தப் பின்புலத்தில், மனித உரிமைகள் பேணும் விடயத்துக்காக புதிய கட்டமைப்பை - சீர்திருத்தங்களை - தேட வேண்டிய கட்டாயம் ஐ.நாவுக்கு ஏற்பட்டுவிட்டது.

# இலங்கை விடயத்தில் மனித உரிமை கவுன்ஸிலின் தீர்மானம் குறித்து மேற்குலக இராஜதந்திரிகள் அதிர்ச்சி

கொழும்பு, மே, 30

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் இலங்கை குறித்த விசேட அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் கடும் அதிர்ச்சி தெரிவித்துள்ளன. மனித உரிமை கவுன்ஸில் ஏற்படுத்தப்பட்ட நோக்கம் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தெளிவான செய்தி ஒன்றை அனுப்புவதற்கான சந்தர்ப்பத்தை மனித உரிமை கவுன்ஸில் தவறவிட்டுள்ளது என கனடாவுக்கான ஜெனீவா இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் ஏற்றுகொண்டுள்ள தீர்மானத்தில் காணப்படும் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் மற்றும் மூக்கிய விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளமை குறித்து சுவிற்ஸர்லாந்து கண்டனம் தெரிவித்துள்ளது.

மோதல் கரணமாக இடம் பெயர்ந்துள்ள மூன்று லட்சம் மக்களிடம் மனிதாபிமான அமைப்புகள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாதமை பற்றியும் சுவிற்ஸர்லாந்து சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வாக்களிப்பு மிகவும் ஏமாற்றமளிக்கின்றது மனித உரிமை கவுன்ஸிலை பொறுத்தவரை இது மிகவும் மோசமான ஒரு செயற்பாடு எனவும் அரசியல் காரணங்களுக்காக ஆயிரக் கணக்கான மக்கள் கைவிடப்பட்டுள்ளனர் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (சி)

# ஐ.நா.மனித உரிமைகள் மீதான நம்பகத்தன்மையை சீர்குலைத்துள்ளது இலங்கை மீதான வாக்கெடுப்பு

## 'த பினான்சியல் ரைம்ஸ்' நாளேடு சாடல்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின் முடிவு, அதன் மீதான நம்பகத்தன்மையை மேலும் சீர்குலைத்துள்ளது என்று 'த பினான்சியல் ரைம்ஸ்' நாளேடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 'த பினான்சியல் ரைம்ஸ்' நாளேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு:

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு அதன் மீதான நம்பகத்தன்மையை மேலும் சீர்குலைத்துள்ளது.

இலங்கைக்கு ஆதரவாக அதிக வாக்குகள் கிடைத்ததைத் தொடர்ந்து மேற்குலகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதனையும் செய்யமுடியாத நிலையை அடைந்துள்ளது. இலங்கையில் முற்றுப்பெற்ற போர் பாரிய மனித உரிமை மீறல்களுடன் நிறைவுபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

சீனா, ரஷ்யா, இந்தியா உட்பட 26 நாடுகள் இலங்கை அரசின் பிரேரணையை ஆதரித்திருந்தன.

இலங்கை அரசு தனது பிரேரணையில் உள்நாட்டு விவகாரங்களில் வேறு நாடுகள் தலையீடு செய்வதை எதிர்த்ததுடன், விடுதலைப் புலிகள் மீதும் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

ஆனால், அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தீர்மானம் கொண்டுவரப்படாதது, மனித உரிமை சபைக்கு ஒரு பின்னடைவாகும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்டவியல் பணிப்பாளர் ஜூலீற்றா டீ றைவிரோ தெரிவித்துள்ளார்.

கனடா, மெக்சிக்கோ, சிலி போன்ற நாடுகளின் ஆதரவுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா உட்பட புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் ஜூன் மாதத்தின் நடுப் பகுதியிலேயே சபையின் கூட்டத் தொடர்களில் கலந்துகொள்ள உள்ளனர்.

உதவி நிறுவனங்களின் பணிகளும் தொடர்ச்சியாக இலங்கை அரசினால் தடுக்கப்படுவதாக உதவி நிறுவனங்கள் தெரிவித்து வருகின்றன.

இலங்கையில் நடைபெற்ற மோதல்களில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயாதீனமானதும், காத்திரமானதுமான விசாரணைகள் தேவை என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவித்திருந்தார்.

இறுதி வாரம் நடைபெற்ற சமரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். மக்களின் நடமாட்டத்தை விடுதலைப் புலிகள் தடுத்ததுடன், எறிகணைத் தாக்குதல்களை மக்களின் மீது இலங்கை அரசு நடத்தியிருந்தது.

மக்கள் காணமால் போவது, துன்புறுத்தப்படுவது, நீதிக்குப்புறம்பாக படுகொலை செய்யப்படுவது போன்ற தகவல்கள் தற்போதும் தொடர்ச்சியாகக் கிடைத்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

30 வருடகால போர் கடந்த வாரம் பாரிய அழிவுடன் நிறைவுபெற்றுள்ளது. இந்தப் போரில் 80,000 - 100,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முகாம்களில் தங்கியுள்ள முதியோர்களின் பெயர் விவரங்களைக் காட்சிப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, மே 30

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் பெயர் விவரங்களை காட்சிப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தில் இந்த பெயர்கள் காட்சிப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்த பெயர் விவரங்களை பார்வையிடுவதன் மூலம் உறவினர்கள் அவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கு விண்ணப்பிக்க முடியும் என குறிப்பிடப்படுகின்றது.

வயது முதிர்ந்தவர்கள் அவர்களது உறவினர்களுடன் முகாம்களுக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர் என வவுனியா அரசாங்க அதிபர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் மொத்தமாக இரண்டு லட்சத்து 62 ஆயிரம் பொது மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (50)

# போட்டிகள் நடத்த முன் அனுமதி பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 30

நீர்வேலி தரவையில் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நடத்த முன் அனுமதியை பிரதேச சபையில் பெறவேண்டும் என்று வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.நடராஜா அறிவுறுத்தியுள்ளார்.

நீர்வேலி உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதியைப் பெற வேண்டும் என்றும் -

அனுமதியின்றி நடத்தப்படும் போட்டிகள் பிரதேச சபையால் தடை செய்யப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். (1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 17 | 31.05.2009 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | அட்டமி பி.இ. 12.53 வரை |
| நட்சத்திரம்: | மகம் மு.ப. 09.11 வரை |
| சுபநேரம்: | 08.52 - 10.22 |
| ராகுகாலம்: | 04.22 - 05.52 |

# இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் உள்ள வயோதிபர்களை குடும்பங்களுடன் சேர்க்குக!

## ஜனாதிபதியிடம் சங்கரி வேண்டுகோள்

கொழும்பு, மே, 30

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் வாழும் முதியவர்கள் பலர் தமது குடும்பங்களை விட்டுத் தனித்து வாழ்கின்றனர் அவர்கள் தங்களை யார் எனக் கூட, அறிவிக்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே, அவர்களை அவர்களின் குடும்பங்களுடன் இணைக்குமாறும், அவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுமாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் கூறப்பட்டிருப்பவை வருமாறு :-

நான் முன்னர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இதுவரை பல முதியோர்கள் பராமரிக்கக்கூடியவாறு உறவினர்கள் பொறுப்பேற்பதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. இருந்தபோதும் இன்னும் பலர் தனிமையில் வாடிவருகின்றனர். தம்மை இன்னார் என்று அறிவிக்க முடியாத வயது கடந்த நிலையையும் தாண்டி அவர்கள் அங்கு உயிர் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் அவர்கள் மெல்ல மெல்ல செத்துக்கொண்டிருக்கின்றார்கள். வசதி படைத்த அவர்களின் உறவினர்களும், பிள்ளைகளும் வெளிநாடுகளிலும், இலங்கையின் தூர இடங்களிலும் வசித்துவருவதாலும், அவர்களின் உறவினர்கள் அவர்கள் நிலையை அறிந்துகொள்ள இயலாமல் துயரப்பட்டுக்கொண்டுள்ளார்கள்.

முகாம்களில் ஒலிவாங்கியில் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களும் அவர்கள் செவியில் ஏறுவதில்லை. உணவைப் பெற வரிசையில் நிற்க இயலாமல் படும்துன்பம் சொல்லில் அடங்காது. எனவே, அவர்கள் தொடர்பான பெயர் விவரங்களை உடன் வெளியிடுவதுடன் தயவு செய்து தனியாக விடப்பட்டவர்களை ஒன்று சேர்க்குமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 66 இனங்காண இயலாத வயோதிபரின் சடலங்கள் வவுனியா, பூந்தோட்டம் மயானத்தில் அநாதைப் பிணங்காளகப் புதைக்கப்பட்டன. இதுபோன்ற சிரமங்களைத் தவிர்ப்பதற்கும் இவ்வாறானவர்கள் உடன் அடையாளம் காண ஏற்பாடு செய்யுமாறும், பிரேத அறை ஒன்றை உடன் ஏற்பாடு செய்யுமாறும் நான் உங்களுக்கு முன்னர் விடுத்த வேண்டுகோளையும் தயவு கூர்ந்து கவனத்தில் எடுக்குமாறும் பணிவுடன் வேண்டுகின்றேன் - என்றுள்ளது. (க-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

# அறிவித்தல்

### திருவிழாக் கால தற்காலிகக் கடைகள் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 23.06.2009 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி 08.07.2009 ஆம் திகதியன்று நிறைவு பெறும். இக்காலகட்டத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினால் சுட்டிக் காட்டப்படும் இடங்கள் 07.06.2009 ஆம் திகதியன்று பி.ப. 12.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

பங்கு பற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்.

# துயர் பகிர்கின்றோம்



### செல்வன் ஜெகசோதி தணிகைக்குமரன்

யாழ். இந்துக் கல்லூரில் உயிரியல் பிரிவு 2009 இல் கல்வி கற்கும் மாணவன் செல்வன் ஜெகசோதி தணிகைக்குமரனின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடைய துயரில் பங்கெடுப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்
உயிரியல் பிரிவு-2009
யாழ். இந்துக் கல்லூரி

# விரிவுரைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே- 30

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவின் மரணத்தை இட்டு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் அனைத்து விரிவுரைகளும் இன்றும் நாளையும் இடம்பெறமாட்டா என்று பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (1)

* * *

யாழ்ப்பாணம் ,மே- 30

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை பட்டபின் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த பகுதி நேர விரிவுரைகள் தவிர்க்க முடி யாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

விரிவுரைகள் வழமைபோன்று எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் என்று கல்வியியற்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். (203)

## வடமராட்சி வலயத்தினர் உடுபுடவைகள் வழங்கினர்

யாழ்ப்பாணம், மே 30

வடமராட்சி கல்வி வலயத்தினர் மிருசுவில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உடுபுடவைகளை நேற்று முன்தினம் வழங்கியுள்ளனர்.

வடமராட்சி வலய அலுவலகத்தின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரினால் சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைத் துணிகள் போன்றவை கொள்வனவு செய்யப்பட்டு நலன்புரி நிலைய மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## 'நிஷா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட யாழ்.அரச ஊழியர்களுக்கு கடன்

இணுவில், மே 30

2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட கடும் மழை, நிஷா சூறாவளி போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட யாழ். [illegible]வட்ட அரச ஊழியர்களுக்கு அவர்களின் [illegible] மாத அடிப்படைச் சம்பளம் கடனாக [illegible]தற்கான சுற்று நிருபம் யாழ்.செயல[illegible] கிடைத்துள்ளது.

[illegible]ாதங்களில் அறவீடு செய்யும் வகையில் இக்கடன் வழங்கப்படவுள்ளது.

பாதிப்பு குறித்த கிராம சேவையாளரின் உறுதியுரையுடன், பிரதேச செயலரின் சிபார்சுக் கடிதத்தை சமர்ப்பித்து இக்கடனுக்கு அரச ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1-45)

## விளையாட்டு விழா

இணுவில், மே 30

உரும்பிராய் "கிட்ஸ்பார்க்" மழலைகளின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி வசந்தகுமார் மதுமதி கலந்து கொள்வார். (1-45)


**படிவம்**

2010 ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கு அனுமதி பெறுவதற்கான / தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான புதிய படிவம் விற்பனைக்கு

Bharathy Pathippakam, [illegible] K.K.S. Road, Jaffna.


## ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை

# கேள்வி அறிவித்தல் -2009

கீழ்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விஅறிவித்தல் 12.06.2009 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். இவ்வேலைகளுக்கு வேண்டப்படுகின்ற நிர்மாணப் பயிற்சி நிலைய (இக்ராட்) தரத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் / சமூகமட்ட நிறுவனங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகைமையுடையவராவார்கள்.

| | வேலையின் பெயர் | வேண்டப்படும் 'இக்ராட்' தரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள காணிக்கு எல்லை மதில் அமைத்தல் | M-9 | 9,230.00 | 560.00 |
| 02 | ஊர்காவற்றுறை நகரகடைத்தொகுதி திருத்தம் மற்றும் மலசலகூடம் நிர்மாணித்தல் | M-9 | 8,950.00 | 560.00 |
| 03 | ஊர்காவற்றுறை உப்புக்குளவீதி புனரமைத்தல் | M-9 | 6,000.00 | 560.00 |
| 04 | ஊர்காவற்றுறை நகர கடைத்தொகுதிக்கு இரும்புக் கேற்பொருத்துதல் | M-10 | 3,650.00 | 560.00 |
| 05 | ஊர்காவற்றுறை மண்குழி பொதுக் கிணறு புனரமைத்தல் | M-10 | 950.00 | 560.00 |

கேள்விப்பத்திரங்களை ஊர்காவற்றுறை பிரதேசசபை அலுவலகத்தில் 01.06.2009 ஆம் திகதி தொடக்கம் மேற்குறித்த கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர்,ஊர்காவற்றுறை பிரதேசசபை என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை பிரா.உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கும் 12.06.2009 ஆம் திகதி 10 மணிக்கு முன்னராக நேரடியாகவோ/பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. கணேசானந்தராஜா,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர், கலைப் பீடாதிபதி
பேராசிரியர்

## சோ.கிருஷ்ணராஜா

அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ஆசிரியர் சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 16 * 03 * 1946



உதிர்வு 30 * 04 * 2009

### திருமதி சண்முகலிங்கம் பாக்கியலட்சுமி (சீனிஅம்மா)

அன்பைச் சுரந்து அமுதாய் ஊட்டினாய்
பண்பைப் பழக்கி பாசமாய் பருக்கினாய்
பாசக்கயிற்றால் பலரையும் அரவணைத்தாய்
பற்றில் உறுதியாய் பணிவோடு வளர்த்தாய்
அத்தனையும் இருந்துதான் என்ன?
ஆசை கலையும் முன்னே அத்தனையும் விட்டு
அமைதியாய் இறைவனடி சேர்ந்தாய்
ஆறாத்துயரில் ஆழ்ந்தாலும் அமைதியாய் நின்று
உங்கள் ஆத்மசாந்திக்காய் வேண்டுகின்றோம்

கடந்த 30.04.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (30.05.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்: சண்முகலிங்கம்
பிள்ளைகள்: ச.கண்ணன்
ச.றஜிதா, ச.உதயானன்
பேரமகன்: ஈ.ரவீந்திரநாதன் (இ.மி.ச)

பாடசாலை வீதி, கற்கோவளம்,
பருத்தித்துறை. (85719)

# மரண அறிவித்தல்கள்

## மகேந்திரன் கோபிநாத்

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மகேந்திரன் கோபிநாத் 18.05.2009 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் மகேந்திரன் - குணவதி தம்பதி யினரின் அன்பு மகனும் பிரணவனின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அருணா சலம், சரஸ்வதி, தங்கரட்ணம் மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்பு, கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்றையதினம் காரைநகர், கருங்காலி இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
த.பேரம்பலம்
(ஏரம்பு).

காரைநகர்.
T.P No: 0112715404 (85731)

## திருமதி சோமசுந்தரம் (ஆச்சாரியார்) நித்தியானந்தவதி



[illegible]ணிப்பாயைப் பிறப்பிடமாகவும் காரைநகர், களபூமி, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நித்தியானந்தவதி (28.05.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சதாசிவம் தம்பதியினரின் அன்பு மகளும் சோமசுந்தரம் ஆச்சாரியாரின் அன்பு மனைவியும் கிருபாகரன், விக்னேஸ்வரன், ஜெயலலிதா, சுபாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் பாஸ்கரன், கோமதி, தர்மசுதன் (C.T.B) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலக்சன், லக்ஸ்மன், கிஷாந், நதிஷா, கிஷாலினி, யதுஷன், கிந்துஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களபூமி, தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
களபூமி, காரைநகர்.

தகவல்: சோ.கிருபாகரன்
(மகன்) ஆச்சாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி கணேசா அறநெறிப் பாடசாலையின் 7 ஆவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சோமதேவ குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் அறநெறிப்பாடசாலைத் தலைவர் கு.தியாகராஜ குருக்கள், கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் ச.லலீசன், நலன் விரும்பியான ச.முருகையா மற்றும் ஆசிரியர்கள் நிற்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

[படங்கள்:கோப்பாய் செய்தியாளர்]

## தணங்கிளப்புப் பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 30

உயர்பாதுகாப்பு வலயமான தணங்கிளப்புப் பிரதேசத்தில் 2009/ 2010 ஆம் ஆண்டுகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெற்செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் தேவையான ஆவணங்களுடன் வருகை தந்து, கைதடி கமநலசேவை நிலையத்தில் எதிர்வரும் 1 ஆம், 2 ஆம், 6 ஆம் திகதிகளில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (204)

## விவசாய சம்மேளனத்தில் வருடாந்த பொதுக்கூட்டம்

வடமராட்சி,மே 30

புலோலி வடமேற்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புலோலி கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புலோலி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் ச. உருத்திரேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204 - 236)

## திக்கம் பாலர் பாடசாலையில் ஆக்கத்திறன் கண்காட்சி

வடமராட்சி,மே 30

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் திக்கம் பாலர் பாடசாலை மழலைகளின் ஆக்கத்திறன் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் ப. சுரேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில், யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் க. திலகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204 - 236)

## சாரணர் சங்கத்தின் பயிற்சிக் கருத்தரங்கு

வடமராட்சி,மே 30

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட கலைக்கூறு 1 இன் பயிற்சிக் கருத்தரங்கு நாளை ஞாயிறுக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி. செல்வராசா அறிவித்துள்ளார். (204 - 236)

## மாதாந்த சஞ்சிகைகள் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே 30

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகங்களில் கடந்த வருடம் பயன்படுத்திய வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் பொது மக்களுக்கு மலிவு விலையில் விநியோகிக்க நகரசபை நிர்வாகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

சஞ்சிகைகள் பெற விரும்புவோர் சாவகச்சேரி பொது நூலகத்துடன் தொடர்புகொண்டு தேவையான சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-207)

## காசநோய்க் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 30

யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் காசநோய் விழிப்புணர்வு தொடர்பான வீடியோப் படக் காட்சியும், கருத்தரங்கும் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் நெறிப்படுத்திய இந்நிகழ்வில், ஆசிரியர்களும் பெருமளவிலான மாணவர்களும் பங்குபற்றினர். (04)

## காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்,மே 30

பாவனைக்கு உதவாத காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

சுகாதாரப் பிரிவினர் நடத்திய திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பால் மா வகைகள், 'செரலாக்', பிஸ்கட் வகைகள், இனிப்பு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்தனர்.

இவ் வர்த்தகருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (203-207)

குடாநாட்டு வீதிகளைத் திருத்துவதற்கென

## தார் பரல்கள் எடுத்துவரப்பட்டபோதும் பண்ணைப் பாலம் புனரமைக்கப்படவில்லை

நல்லூர், மே 30

குடாநாட்டின் வீதி திருத்த வேலைகளுக்கெனத் தார் பரல்கள் எடுத்துவரப்பட்டுள்ள போதும் பண்ணைப் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தீவுப் பகுதியையும் குடாநாட்டையும் இணைக்கும் முக்கியமான இந்த வீதி, கடந்த ஆண்டில் ஏற்பட்ட 'நிஷா' வெள்ள அனர்த்தத்தின்போது மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்தது.

போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டிருந்த பண்ணை தீவகப்பாதை அதன் அவசியம் கருதி சேதமுற்ற பகுதிகள் வெறும் கற்களையும் மண்ணையும் கொண்டு தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டது.

எனினும் இந்தப் பாதையூடாகப் பயணிக்கும் வாகனங்கள், வீதி உரியமுறையில் புனரமைக்கப்படாமையினால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றன.

ஒன்றை ஒன்று விலத்திச் செல்லக் கூடிய வசதிகளுமின்றிப் பெரிதும் சிரமமடைவதாக வாகனச் சாரதிகள் கூறுகிறார்கள்.

சாதாரணமாக மோட்டார் சைக்கிள்கூட விலத்திச் செல்லமுடியாத அளவிற்கு வீதி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகத்திற்கான பிரதான பாதை இது என்பதால் இந்தப் பாதையைத் திருத்தியமைக்கும் பணிகள் தாமதமின்றிச் செயற்படுத்தப்பட வேண்டும் எனத் தீவுப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-111)

## தபால் அடையாள அட்டை விநியோகிக்க எதிர்வரும் 2 ஆம் திகதி நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.பிரதம தபாலகத்தின் தபால் அடையாள அட்டை விநியோகிக்கும் நடமாடும் சேவை மீண்டும் எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று யாழ்.பிரதம அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் பரீட்சை மற்றும் மெய்வன்மைப் போட்டி என்பவற்றுக்குத் தபால் அடையாள அட்டை அவசியம் தேவை. இதனைக் கருத்தில் கொண்டு இந்த நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அஞ்சல் அட்டை நடமாடும் சேவை எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை மூலம் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-224)




## குடாநாட்டில் கடந்த ஐந்து மாத காலத்தில் 140 பேர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்

வடமராட்சி, மே 30

குடாநாட்டில் இந்த ஆண்டின் - கடந்த ஐந்து மாத காலப்பகுதியில் மட்டும் 140 பேர் காசநோயின் தாக்கத்துக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்:

காசநோயின் தாக்கம் குடாநாட்டில் திடீரென வேகமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தக் காசநோயைக் கட்டுப்படுத்த மக்களிடையே விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் இது சம்பந்தமான விரிவுரைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டின் கடந்த ஐந்து மாத காலப்பகுதியில் 140 பேர் காசநோய்க்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களில் மூன்றுபேர் குழந்தைகள். இவர்களுக்கு விசேட மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதனைவிட 12 பேர் கோப்பாய் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் இருவர் இடம் பெயர்ந்த முகாம்களில் இருந்து இனம் காணப்பட்டனர்.

இந்தக் காசநோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (203-224)

## அரச சேவையில் உள்ள பெண் ஊழியர், ஆசிரியைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைய கால நீடிப்பு

அச்சுவேலி, மே 30

அரசாங்க சேவையில் உள்ள பெண் ஊழியர்கள், ஆசிரியைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு 2009.06.30 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்து சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பெண் ஊழியர், ஆசிரியைகள், தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ளாத நிலையில் மரணம் அடைந்திருந்தால் அவரின் சட்டபூர்வமான கணவர் உரியமுறையில் விண்ணப்பம் செய்து ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்துக்குப் பொது நிர்வாக அமைச்சு அனுப்பிவைத்த சுற்றறிக்கையை உள்ளடக்கி, யாழ்.மாவட்ட செயலகப் பிரதம கணக்காளர் கே.சண்முகரட்ணம் சுற்றறிக்கையை யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களத் தலைவர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்.செயலகப் பிரதம கணக்காளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ''பொதுச் சேவையில் உள்ள பெண் ஊழியர்கள் விதவை, அநாதை ஓய்வூதிய செயற்பாட்டு இலக்கம் 2/2001 இற்கு அமைய இணைதல்'' என்ற சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பொது நிர்வாக சுற்றறிக்கை 13/2001 (vi) இன் படி கூறப்பட்டதற்கு அமைவாக பெண் ஊழியர்கள் இதுவரை காலமும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணையாமல் (23.08.1983 இற்கு முன்பு நியமனம் பெற்றவர்கள்) இறந்திருந்தாலும் தபுதாரர் ஓய்வூதியம் பெறுவதற்கு இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு அமைவாக 30.06.2009 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-11)

## திருவிழிப்பு ஆராதனை

யாழ்ப்பாணம், மே 30

தூய ஆவியார் திருவிழிப்பு ஆராதனை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் நாளை அதிகாலைவரை புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## வெளியூருக்கான தபால் சேவைகள் சீராக இடம்பெற்று வருகின்றன

யாழ்.தபாலக வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், மே 30

குடாநாட்டில் இருந்து வெளியூருக்கான தபால் சேவை சீராக இடம்பெற்று வருவதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கப்பல் மற்றும் விமானம் ஊடாக வெளியூர் தபால்கள் சீராக வந்து சேர்கின்றன.

அதனைவிட இங்கிருந்தும் சேர்க்கப்பட்ட தபால்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படுவதால் வெளியிடங்களுக்கான தபால் சேவைகளில் எவ்வித தாமதமும் ஏற்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கப்பல் சேவையில் இருந்த தாமதத்தால் வெளியூர் தபால் விநியோகத்திலும் தாமதம் ஏற்பட்டதாகத் தபாலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களிலுள்ள கிராம சேவையாளர்கள் மீண்டும் அதே பதவியில் அமர்த்தப்படுவர்

கொழும்பு, மே 30

வன்னியிலிருந்து இடம்பெயர்ந் துள்ள கிராம சேவை உத்தியோகத்தர் களை மீண்டும் அதே பதவியில் நியமிப்பதற்கு அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அமைச்சின் செயலாளர் யூ.எல். எம்.ஹாலிடீன் தெரிவித்தார்.

இவ்வாறு நியமனம் பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்கள் இடம்பெயர்ந்த மக்களுக்குக் குடிதண்ணீர் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டும்.

இறப்பு, பிறப்பு தொடர்பான விடயங்களைப் பதிவு செய்வதற்கு உதவும் அதேவேளை நலன்புரி நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக முகாமைத்துவத்துக்கு அறிவிக்கவேண்டுமெனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (சி)


## அமரர் சமூகசோதி - கார்த்திகேசு கணேசதாசன்

(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்)

### ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகு: 24.12.1932
திதி:அட்டமி (31.05.2009)
விண்ணுலகு: 11.06.2008

எங்கள் அன்புத்தெய்வமே! அப்பா, பப்பா,
ஆசையப்பா, ஆசைப்பப்பா, அன்பு நம்பி கணம் எங்கு சென்றீர் ஐயா
உம்மைப்பிரிந்து நிற்கும் உமது குடும்ப வடிக்கும் கண்ணீருக்கு
எல்லையில்லை ஐயா ! தன்னலம் கருதாது
நீர்செய்த சேவை இனிமேல் யாராலும் செய்யமுடியாதப்பா.
ஏழை, எளியவர் என்றும் பாராது மலர்ந்த முகத்துடன்
இனிய வார்த்தைகளால் எம்மை வரவேற்று
எமக்கு ஆவன செய்ய உம்மைப்போல் யாரும் இல்லை ஐயா !
மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது பிறர்துன்பம் தன் துன்பம்
போல் ஏற்று எடுத்த கருமத்தை ஓயாது உழைத்து
வெற்றி பெறச் செய்வீர் ஐயா! இவற்றையெல்லாம் செய்த பண்பாளனே!
உம்மை இழந்து யாருமற்ற அநாதைகளாய்க் கண்ணீர் விடும்

அன்பு மனைவி, மகள் -நந்தினி, பேரன்- கங்கா,
அன்பு அண்ணா - நாதன்,
அண்ணிமார் - மகேஸ்வரி, தங்கம்மா,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், அன்பர்கள்.

அ.சக்திவேல்,
''கங்கபதி''
ஆலடி, உடுவில்,
சுன்னாகம்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணுலகில்: 25.09.1946
விண்ணுலகில்: 01.05.2009

திருமதி
### ரூபி வேலாயுதபிள்ளை
(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை)

அன்பாலும் பண்பாலும் பரிவுடனே அரவணைத்து
அறிவுடைமை சீர்சிறப்பு அனைத்தும் அள்ளித்தந்து
முல்லை மலர்ச் சிரிப்பு திர்க்கும் எங்கள் அம்மாவே!
முத்தான முகம் காணாது ஏங்குகின்றோம்
ஆண்டவனாய் என்றும் எம்முள்ளத்தில் அமர்ந்து
ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுகிறோம் அம்மா!

கடந்த 01.05.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப ஒளிவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் மலர்வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் தொலை பேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள் வதோடு, இன்று [30.05.2009] சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள் ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்: கணவர்,
(DR.க.வேலாயுதபிள்ளை-T.P. No. 0777222434,
பிள்ளைகள்: DR.வே.ஜெகரூபன்- T.P. No 0777222433,
E.mail- vjegaruban@Yahoo.com
DR.வே.ரமேஸ்குமார் - T.P.No. 0777222432
மருமக்கள்: ஜெ.ஜெனித்திரா (நாட்டியகலாமணி),DR.ர.சுகிதா.
பேரப்பிள்ளைகள்: ஜெ.வைஷ்ணவி, ஜெ.வேல்அபிஷேக்,
ர.கௌசிகன்.
வேல் வைத்தியசாலை, நீர்வேலி மத்தி.



## நெஞ்சம் கதறிடும் எட்டாம் ஆண்டுதனில்...



மண் மகிழ 11.09.1984
மண் கதற 29.05.2001

### செல்வி இலங்கைநாயகம் துஷ்யந்தி (துர்க்கா)
(மாணவி, திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி)

திதி: வளர்பிறை ஸப்தமி (30.05.2009)

பேர்போற்று முத்தமியாய் பாங்குடனே நீ வாழ்கையிலே
ஊர்போற்று முமைக்கண்டு வுவந்திட்டோம் ஈன்றோர்நாம்
சேர்ந்திடு மழகுகொண்டு செவ்வாயி லுதித்திட்ட - நம்குஞ்சே
பார்கேட்கக் கதறுகிறோம் பெற்றோர்நா முமையிழந்து!

ஆண்டெட்டு மானதுவோ அவனிவிட்டு நீயகன்று
மாண்ட உம் நினைவு மாறவில்லை யெமைவிட்டு
பூண்டவு மன்புதனை அகமிருத்தி வாழ்கின்றோம் - நாம்
கொண்ட வாற்றாமையால் தவிக்கின்றோ மும்சோதரர்கள்!

வண்ணமிகு வார்த்தைபல பேசியெமை மகிழ்விப்பாய்
எண்ணம்நிறை யன்புகொண்டு வுவந்துநின்றோம் நாமிங்கு
சென்னரியக் காலனவன் இரக்கமின்றிக் கொன்றான் - உம்
அண்ணிமாரு மம்மம்மாவும் வாடுகின்றோம் நீரின்றி!

எமது குலச்செல்வம் விட்டுப் பிரிந்து ஆண்டுகள் எட்டு கடந்துவிட்ட நிலையில் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பிரிவால் வாடிநிற்கும்
அம்மா, அப்பா, அம்மம்மா,
அண்ணைமார், அண்ணிமார், மருமக்கள்



## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
03 ★ 11 ★ 1954

மறைவு
30 ★ 04 ★ 2009



வேலணை 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
செட்டித்தெரு - நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் மயில்வாகனம் பேரின்பநாதன் (நாதன்-சோதி)
(உரிமையாளர்: நாதன்றேடர்ஸ்)

அன்பின் திருவுருவாய்
அறிவின் சுடர் ஒளியாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
எமக்கு நல்வழி காட்டி
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
எமது அன்புத் தெய்வத்திற்கு
எங்கள் விழிநீரைக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (30.05.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

74/1, செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் துறையில் பிரகாசிக்கும் வீரர்கள் கல்வியிலும் உயர்வதற்கு வழிகாட்டல்கள் அவசியம்

யாழ். குடாநாட்டில் தற்போது இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

விளையாட்டுப் போட்டிகள் ஒரு காலத்தில் வளையாட்டாக மட்டும் கொள்ளப்பட்டன. நாளடைவில் உடல், உள விருத்திக்கான பயிற்சியே விளையாட்டெனக் கூறப்பட்டது.

இன்று விளையாட்டு வாழ்க்கைக்கு கைகொடுக்கும், தொழிலுக்கு வழிகாட்டும் ஒரு துறையாக அமைந்து விட்டதென்பது அனைவரும் அறிந்ததே. இதனை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள்முதல் அனைவரும் நன்குணர்வர்.

பல்கலைக்கழக அனுமதி, தேசிய கல்வியற் கல்லூரி நுழைவுவரை விளை யாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்த வகையில் பல்கலைக்கழக அனுமதியின்போது தேசிய,மாவட்ட, மகாணப் போட்டிகளில் பெறப்படும் சான்றிதழ்களுக்கு புள்ளிகள் இடப்படுகின்றன.

பல்கலைக்கழக அனுமதிக்கு ஒரு சில புள்ளிகள் தடையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் விளையாட்டுக்களில் பெற்ற சான்றிதழ்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் ஒரு மாணவனின் உயர் கல்வியைத் தீர்மானிக்கின்றன.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத ஒருவருக்கு தேசிய கல்வியியற் கல்லூரிகள் கை கொடுத்து நிற்கின்றன. இதற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பெற்ற சான்றிதழ்கள் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் வழி ஏற்படுத்துகின்றன.

இந்த நிலைமையை எந்த அளவிற்கு விளையாட்டு வீரர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் - அறிந்துகொண்டுள்ளார்கள் என்பதும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

இதனை இங்கு குறிப்பிட வேண்டிய தேவையும் அவசியமும் எழுந்துள்ளது.

இவ்வாண்டு வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகளின்படி விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டிய மாணவர்கள் சிலர் கணித பாடத்தில் சித்தியடையத் தவறியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவர்களின் உயர்தரக் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஒரு வருடகாலம் கடத்த வேண்டியுள்ளது. ஒரே தடவையில் கணித பாடத்திலும் சித்தியடைந்தாலே ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் கற்க முடியும் என்ற விடயம் பலருக்கும் இதுவரை தெரியாது.

கடந்த ஆண்டுகளைப் போல இரண்டாம் தடவை கணித பாடத்தை மட்டும் சித்தி பெற்றுக்கொடுத்து கல்வி கற்கலாம் என்ற நம்பிக்கை பலருக்கு இப்போது ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. இந்த மாணவர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் அறிவித்தல்கள் உரிய வகையில் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் இத்தகைய அவலத்தைத் தவிர்த்திருக்கலாம் எனப் பலரும் கூறுகிறார்கள்.

இதே போன்று கல்வியியற் கல்லூரிக்கான அனுமதிக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற பல விளையாட்டு வீரர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளார்கள். கடந்த ஆண்டுகளுக்கு முன்னர் சுகாதாரமும் உடற்கல்வியும் மேலதிக பாடமாகக் கொள்ளப்பட்டது. இதனால் வேறு பாடங்களை தெரிவுசெய்து மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

கடந்த ஆண்டில் இருந்து இப்பாடம் தொகுதிப்பாடத்தில் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேசிய கல்வியியற் கல்லூரிகளில் உடற்கல்வி அனுமதிபெற வேண்டுமாக இருந்தால் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல்கள் உரிய முறையில் விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்காமையால் மாவட்ட, மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் திறமை

## விளையாட்டில் மட்டும் அக்கறை காட்டுவதால் அவர்களின் எதிர்கால வாழ்வு பாழாகக்கூடாது

களை வெளிப்படுத்தி சான்றிதழ்கள் வைத்திருந்தும் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற பாடத்தில் சித்தி இன்மையால் அனுமதி கிடைக்கவில்லை. இதனால் தம்மைத்தாமே நொந்துகொண்ட அவர்கள் விளையாட்டில் விரக்தியுற்ற நிலையில் காணப்படுகின்றனர். வெறுமனே விளையாட்டின் பெருமை பற்றி மாணவர்கள் மத்தியில் முழங்கினால் மட்டும் போதாது. விளையாட்டு வீரர்கள் எத்தகைய பாடத் தெரிவுகளை மேற்கொள்வதன் மூலம் தமது எதிர்காலத்தை மேம்படுத்தலாம் எனவும் கல்வி அதிகாரிகள் வழிகாட்ட வேண்டும்.

அண்மையில் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளரும் யாழ்.மாவட்ட விளையாட்டுக் குழுத் தலைவருமான ப.விக்னேஸ்வரன் நிகழ்வு ஒன்றில் உரையாற்றியிருந்தார். மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்லும்போது குறிப்பிட்டளவு கல்வியை அக்காலத்தில் இழக்கின்றார்கள். இழந்த கல்வியை ஈடுசெய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு உரியதென அவர் தனது உரையில் வலியுறுத்தியிருந்தார்.

இன்று இச்செயற்பாடுகள் ஒரு சில பாடசாலைகளில் நடைபெறுகின்ற போதிலும் பல பாடசாலைகளில் அவை சீராக மேற்கொள்ளப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டு வீரர்களின் பேறுகள், திறமைகளுக்கு மட்டும் உரிமை கோரினால் போதாது அவர்களின் எதிர்கால வளர்ச்சியிலும் விடயங்களிலும் கூட அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

**வின்னன்.**

இன்று பல வீரர்கள் பாடசாலை கல்வி நிறைவு பெற்றதைத் தொடர்ந்து அடுத்த கட்டம் என்னவென்று தெரியாமல் திண்டாடுகின்றார்கள். அத்தகைய வீரர்கள் இனம் காணப்பட்டு விளையாட்டை ஊக்குவிக்க நடவடிக்கையெடுப்பதுடன் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது கல்விச் சமூகத்தின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

இத்தகைய செயற்பாடுகள் வீரர்கள் விளையாட்டுத்துறையில் தொடந்து நிலைத்திருக்க வழி அமைக்கும்.

# விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான கல்வியை அருகிலுள்ள பாடசாலைகளில் வழங்க வேண்டும்

## தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

வேலணை, மே 30

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விசேட கல்வி இப்போது விசேட பாடசாலைகளிலே வழங்கப்படுகிறது.

ஆனால் அவர்களுக்கான கல்வி அவர்களின் வாழ்விடத்திற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டும்.

அதனால் இன்று எல்லாப் பாடசாலைகளும் விசேட கல்வியை வழங்குவதற்கு தயாராக உள்ளன.

தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.குயிண்டஸ் மேற்கண்டவாறு கூறினார்.

காரைநகர் பிரதேச பெற்றோர்களுக்கான விசேட கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ்ரன் கல்லூரியில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது பிரதேசத்தில் பாடசாலை சேராத, பாடசாலையைவிட்டு இடைவிலகிய பிள்ளைகள் தொடர்பான ஆய்வுகளில் ஒரு சிலரே அவ்வாறு கண்டறியப்பட்டு பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர்.

விசேட கல்வி, விசேட தேவையுடையவர்களுக்கான வாய்ப்புகள், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வசதிகள் தொடர்பாக பெற்றோர் அறிந்திருக்க வேண்டும்.

விசேட தேவையுடையோர் என்போர் உடல், உள, சமூகக் குறைபாடுகளை உடையவர்களாவர்.

அவர்களுக்கும் ஏனைய சிறுவர்களுக்கும் வழங்கப்படும் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.

அவர்களின் கல்வியானது அவர்களது வீட்டுச் சூழலில் உள்ள பாடசாலையிலேயே வழங்க வேண்டும்.

அதற்காக விசேட கல்விக்காக பாடசாலைகள் தயார்படுத்தப்படுகின்றன.

வீடுகளில் குறைபாடுள்ள யாராவது பிள்ளைகள் இருந்தால் அவர்களை உங்களது அயற் பாடசாலையில் சேர்க்க வேண்டும்.

அதற்கு அதிபரோ, ஆசிரியர்களோ தடைவிதிக்க முடியாது. அவ்வாறு தடை இருக்குமானால் திணைக்களத்திற்கு அறிவிக்கலாம். அதன்மூலம் உரிய ஒழுங்குகள் செய்து தரப்படும் என்றார்.

இந்நிகழ்வில் யாழ்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் கு.திருச்செல்வம், காரைநகர் உதவி அரச அதிபர்த.ஜெயசீலன் அலுவலக நிர்வாக அலுவலர் ஏ.சத்தியமூர்த்தி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (203-267)

# தூதரகம் தாக்கப்பட்டமைக்கு கனடா கடும் கண்டனம்

கொழும்பு, மே 29

கொழும்பிலுள்ள கனடா தூதரகத்தின் வீஸா வழங்கும் பகுதியில் புதனன்று இடம்பெற்ற ஆர்பாட்டங்களை கனடா கடுமையாகக் கண்டித்துள்ளது.

தனது நாட்டின் தூதரக வளாகத்தையும் பணியாளர்களையும் பாதுகாப்பதற்கு இலங்கைப் பொலிஸார் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இது குறித்து தனது கவலையை கனடா இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளது எனவும் ஒட்டாவாவிலுள்ள வெளிவிவகார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு முழுமையான விசாரணைகளை மேற் கொள்ளும் என கனடா எதிர்பார்க்கிறது எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இது ஒரு திட்டமிடப்பட்டு இலக்குவைக்கப்பட்ட தாக்குதல் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் சிறுபான்மையினரிடம் பாரபட்சம் காட்டக்கூடாது

## அமெ. பிரதிநிதி வற்புறுத்து

கொழும்பு, மே 30

இலங்கையில் சமாதானம் மலர வேண்டுமாயின், அங்கு சிறுபான் மையினருக்கு எதிரான பாரபட்சத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் - என்று ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் கலந்துகொண்ட அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு-

மோதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ மனிதாபிமான அமைப்புகளை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்கள் இந்த வருடத்துக்குள் மீள் குடியேற்றப்பட வேண்டும்.

அதேவேளை, இலங்கையில் சமாதானம் மலர வேண்டுமாயின் அங்கு சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சத்தை முடி வுக்குக் கொண்டுவரவேண்டும் - என்றார். (சி)

# இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் நிதிவழங்க பின்லாந்தில் அடுத்தமாதம் விசேட மாநாடு

கொழும்பு,மே 30

இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இடம் பெயர்ந்த நிலையில் உள்ள பொது மக்களின் மனிதாபிமான நடவடிக் கைகளுக்கு நிதி வழங்கும் நோக்கில் ஐ. நாவின், மனிதாபிமான நடவடிக்கைக ளுக்கான இணைப்பகத்தில் அங்கம் வகிக்கும் நிதி வழங்கும் நிறுவனங்களின் மாநாடு ஒன்று ஜூன் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் பின்லாந்தின் தலைநகர், ஹெல்சின்கியில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான சபையில் அங்கம் வகிக்கின்ற 21 நிதி வழங்கும் நாடுகளும், ஐரோப்பிய ஒன்றிய மனிதாபிமான உதவித் திணைக்களமும் கலந்து கொள்ளவுள்ளன. இந்த நிதிவழங்கல் நாடுகள் அமைப்பின் தலைமைத்துவத்தைப் பின்லாந்து ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த இணைப்பகத்தின் பொது உதவி நிதிக்காக இந்த ஆண்டு பின்லாந்தினால் 20லட்சம் யூரோக்கள் வழங்கப்பட்டுள்ளன. (சி)



துளிர்கள் நிறுவனத்தின் [illegible] கரைநெறி மாணவர்கள் கருணாலயம் சிறுவர் இல்லத்தில் சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் [illegible] போது எடுக்கப்பட்ட படம். நிறுவன இயக்குநர் கே.எஸ்.ரகு, வளவாளர் பா.தனபாலன், கரைநெறி மாணவர்கள் ஆகியோரோடு சிறுவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தில் தேசிய நூலக வார இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் எழுத்தாளர் தனங்கிளப்பூர் வ.சின்னப்பா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். விழா நாயகனுடன் பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம், நூலக உத்தியோகத்தர்கள், நூலக ஆலோசனை சபை உறுப்பினர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (207)



சமூகசேவை சமூகநலத்துறை அமைச்சின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக வடலியடைப்பிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் மேற்படி கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும், அருகில் உதவிப் பிரதேச செயலர் அன்ரன் யோகநாயகம், கணக்காளர், கிராம அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: நவாலிச் செய்தியாளர்)




சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அங்கத்தவர் மத்தியில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் விதைகள் வழங்கப்பட்டு சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர் பாராட்டப்பட்ட நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

சங்கப் பொருளாளர் திருமதி ரவி ஜமுனாவதி, உபதலைவி திருமதி வை.பரிமளம், செயலாளர், திருமதி ம.கீர்த்திநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் போஷகரும் மகளிர் கல்லூரி அதிபருமான திருமதி ரு.இராசரத்தினம் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (படம்: மண்டுவில் செய்தியாளர்)



நீர்வேலி காமாட்சி அம்பாள் முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளையினர் தொப்பி மற்றும் பரிசில்களை வழங்கினர். [illegible] கள் ஆகியோருடன் முன்பள்ளி மாணவர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.



புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற மரநடுகை நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் சங்கத்தின் தலைவர் வைத்தியகலாநிதி க.இராஜரட்ணம், புங்குடுதீவுப் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர் துளசி ஆகியோர் மரநடுகையினை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (9)



யாழ்.பிரதேச கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினர் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்காக சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்களை அண்மையில் யாழ்.பிரதேச செயலர் மரியாதாஸன் ஜெகூவிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் த.முகுந்தன், செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் க.சிவச்சந்திரன், யாழ்.பிரதேச கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.தனேந்திரன், செயலாளர் திருமதி சசிரேகா வரதராஜன் மற்றும் சமாச உறுப்பினர்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



நூலக வாரத்தையொட்டி ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகத்தில் இடம்பெற்ற முதல் நாள் ஆரம்பநிகழ்வில் மலேரியா தடுப்புப் பகுதி அதிகாரி வேலுப்பிள்ளை மண்டலேஸ்வரம் மானிப்பாய் பிரதேச சபைச்செயலாளர் பு.சிவலிங்கத்திடம் மரக்கன்று வழங்குவதையும் அருகில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி சந்திரமௌலி நிற்பதையும் படத்தில் காணலாம். (100)



யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் சிறந்த முறையில் செயற்பாடுகளை முன்னெடுத்தமைக்காக குடமியன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்வில் பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம் மாதர் சங்கத்தலைவி செல்வி ஆ.யுகந்தினியிடம் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விடியலைத்தேடி' குறும்படம்

யாழ்.ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி2008 உயர்தர மாணவர்களின் சுய முயற்சியில் உருவாகியதே 'விடியலைத்தேடி' குறும்படம். எமது பிரதேசத்தின் பொருளாதார நெருக்கடி, போதியளவு நவீனரக உபகரணங்கள் இன்மை எனப்பல்வேறுபட்ட இறுக்கமான சூழலிலும் தமது விடாமுயற்சியால் 'விடியலைத் தேடி' என்ற குறும்படத்தை உருவாக்கி 16.05.2009 அன்று வெளியிட்டுள்ளார்கள். படத்தை அருட்செல்வன் இயக்கியுள்ளார். ரியூமன், டருஸன் யோகானந், ரெமி ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளார்கள். கேதீஸ் இசை அமைத்துள்ளார். ஆர்வமுடன் கல்வி கற்கும் மாணவன் ஆனந் அவனைப் பாடசாலையால் நிரந்தரமாக நிறுத்தி விவசாயத்தில் முழுமையாக ஈடுபடுத்த முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தந்தை, தன் மகனைக் கல்விமானாகக் காணத்துடிக்கும் தாய், அவனது தூய்மையான மனதில் சினிமா பற்றிய எண்ணங்களைப் புகுத்தும் நண்பன், ஆனந்தின் பிரச்சினைகளைக் குறைக்க எண்ணும் பாடசாலை அதிபர் இவற்றுக்கு மேலாக ஆனந்துக்கு மூன்று சகோதரிகள். இப்படியான பிணைப்புக்களுடன் உயிரோட்டமான கதையை முக்கோணவடிவத்தில் நகர்த்திச் செல்கிறார் இயக்குனர் அருட்செல்வம்.

ரியூமன் ,லின்ரன், ரெமி ,யோகானந்,N.S . அல்பேட் ஆகியோர் படத்தில் ''நடிக்கிறார்கள்'' என்று சொல்லமுடியவில்லை. அவ்வளவு இயல்பான நடிப்பு ஒருவருக்கு ஒருவர் கதைப்பது கூட இயல்பான பேச்சாக அமைந்துள்ளது. படம் முழுவதும் சிறிதளவேனும் நாடகத்தின் இயல்பு தோன்றாதிருப்பது மனதுக்கு நிறைவான மகிழ்வைத் தருகிறது.இசை, ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு என்பனவும் சிறப்பாக அமைந்துள்ளது. மொத்தத்தில் ''விடியலைத் தேடி'' பார்ப்பவர் மனதுக்கு ஒரு விடிவைத் தரும். இப்படத்திற்கு இன்னும் நேரத்தை அதிகரித்திருந்தால் இன்னும் நன்றாக அமைந்திருக்கும். குறும்படம் என்ற எல்லைக்குள்ளே அமைந்திருக்கிறது.சிற் சில இடங்களில் சின்னச் சின்னத் தவறுகள் காணப்பட்டாலும் அவற்றைச் சொல்லத் தேவையில்லை இளையவர்களின் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் மனந் திறந்த பாராட்டுக்களைத் தெரிவித்து தட்டிக் கொடுப்போம்.அவர்களது அடுத்த படங்களில் சின்னச் சின்ன தவறுகளையும் சரிசெய்வார்கள் என்ற நம்பிக்கையுடன்.

கு.டெசி, நாவற்குழி




# மண்மூடும் சுவடுகள்


ந. சத்தியபாலன்

கல்யாண வீட்டின் கலகலப்பு அந்த வீட்டில் இரண்டொருவாரங்களுக்கு முன்னரே உருவாகிவிட்டிருந்தது. திருத்த வேலைகளும் வெள்ளையடிப்பும் வர்ணம் தீட்டுதலும் என வீட்டின் வேலைகள் முடிந்தும் முடியாமலும் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருந்தன.. 'விக்கியண்ணை வீட்டில விசேசமெண்டால் அந்தமாதிரிக இருக்க வேணும்...'

வளவில் மரஞ் செடிகளைச் சீராக்கிக் கொண்டிருந்த மூர்த்தி சொன்னான்.

பின்னா இல்லாமலே.. சொன்னாப் போல உள்ளுக்கு இருக்கிற சில மரக்கதிரையளுக்கு வாரிஷ் அடிக்கிறனெண்டு இவன் சீலன் சொல்லிப் போட்டு மறந்து போய்த்திரியிறான் போல அதையொருக்கா,செய்விக்கவேணும்.

'சீலனுக்கு நேரமில்லாட்டா நான் பாத்துக்கொள்ளுறன் அந்த வேலைய... நான் அடிக்காத பெயின்ரே..?' நடேசு மாமா சொன்னார்

'கொஞ்சம் பொறுங்கோடி ராசா பிள்ளையளுக்கு இப்ப கொண்டு வாறன் தேத்தண்ணி... விடியத்துவக்கம் நிண்டு வேலை செய்யுதுகள் இன்னும் ஒரு தண்ணி குடுக்கேல்ல...'

மணியக்கா சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் அயலவர்களும் உறவினர்களுமாய் நாளாக ஆக வீட்டில் கூட்டம் அதிகரித்தது. பலருக்கு மத்தியானச் சாப்பாடே அங்கு தான் என ஏற்பாடாயிற்று.

விக்கினராஜாவின் மூத்த மகளின் திருமணச்சடங்குக்காக சந்தத்தெருவின் அயல் குடியிருப்பாளர்கள் உட்பட ஏதேனும் உதவிக்காக வந்த வண்ணம் இருந்தனர்.

மாலதி என்னும் அவரது மூத்தமகள் திருமணமாகி அவளுக்கு இப்போது திருமண வயதில் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். விக்கியண்ணை ஒரு வயோதிபராகி முன்விறாந்தையில் 'ஈஸிசெயார்' வாசியாகி விட்டார்.

பழைய அயலவர்களும் பலர் இப்போது அந்தத்தெருவில் இல்லை.

இப்போதும் அந்த ஊரில் திருமணங்கள் நடைபெறுகின்றன. இப்போதெல்லாம் வீடுகளில் திருமணம் நடாத்துவது அருகிப் போன விஷயமாகிவிட்டது.

வீடுகளில் 'ரிசப்ஷன்' மட்டும்தான் காசைக் கொடுத்தால் மண்டபக்காரர்களே சொல்லி வேலைகளும் செய்து விடுகிறார்கள் அயல்கூடி உதவுவதோ இரவு இரவாகச் சோடிப்பதோ இந்த நாள் பிள்ளைகளுக்குப் புதினமான விஷயமாகிப் போய்விட்டது. எங்காவது அரிதாய் நடக்கும் விசயம் அது. 'அவரவர் வீட்டில் சாப்பாட்டோடு இவரது வீட்டில் கொண்டாட்டம் என்பதே இன்று வழமை.

காசை எறிஞ்சால் வேலை தானாய் முடியும்... இது வாழும் தத்துவமாய் உறவாகியிருக்கிறது. நூறு ரூபாவுக்கு மேல் செலவிட்டு ஒரு அழைப்பிதழ் அடித்துக் கொடுக்க ஒருக்கா மண்டபத்தில் முகத்தைக் காட்டும் உறவுகள் பெருகிவிட்டன.

# யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக்கல்வியின் உண்மைநிலை

**மொழி** கற்றல் பற்றிய விடயத்தை எடுத்துக் கொண்டால் தாய்மொழியைக் கற்பதற்கு ஒரு பிள்ளைக்கு பிறந்தநாளில் இருந்தே சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருகிறது. தற்காலத்தில் பிள்ளை முன்பள்ளிக்குப் போகும் வரையும் அரிச்சுவடியில் ஒரு எழுத்தும் அறியாது மொழியை நன்கு கற்றுக்கொண்டே முன்பள்ளிக்கு வருகிறது. அதாவது மொழியில் சுமாரான அறிவுடன் இலக்கண வரம்புடன் பேசக்கூடிய அளவுக்கு தாய்மொழி அறிவுடன் அப்பிள்ளை முன்பள்ளியில் காலடி எடுத்து வைக்கிறது. முன்பள்ளியில் இலக்கணம் கற்பிக்கப்படுவதில்லை.

ஒரு மொழியைக் கற்பதற்கு இலக்கணம் அவசியமே இல்லை . கற்ற மொழியைத் தெளிவாக்குவதற்கு மட்டுமே இலக்கணம் தேவைப்படுகிறது.“ஜேம்ஸ் ஹமில்ரன்சு” (James Hamiltan: 1769 - 1829) என்பவர் இலக்கணமின்றி மொழி கற்பிப்பதில் ஒரு புதிய முறையை அறிமுகம் செய்து அதில் வெற்றியும் கண்டார். இது “ஹமில்ரன்சு” மொழி கற்பித்தல் முறை (Hamiltan method of teaching a language)என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாக இருந்தது.

மொழியில் தேவை பேசுவதற்கும் பேச்சுச் சம்பந்தமான தொடர்பாடலுக்கும் உரியது. எழுத்துத் தொடர்பாடலும் பிற்காலத்திற் புகுந்து கொண்டது. இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் ஆங்கில மொழி மட்டும் பின்னடையவில்லை. தமிழ் மொழியிற் கூட இலக்கணப் பிழையின்றி எழுத்துப் பிழையின்றி எழுதுபவர்கள் மிகக் குறைவு. உதாரணமாக 'கஷ்டம்சு என்பதை கஸ்டம் என்றும் 'கிருஷ்ணன்சு என்பதை கிருஸ்ணன் என்றும் எழுதுவதை நாங்கள் காணலாம். (வட எழுத்துக்களை தவிர்க்க வேண்டின் கட்டம் என்றும் கிருட்டிணன் என்றும் எழுதலாம்). இதேபோல லகர,ழகர, ளகர பேதங்கள் ரகர , றகர, பேதங்கள் மற்றும் ஐகாரமும், ஐகாரமும் மாறி எழுதப்படுவதும் கண்கூடு. ஆங்கிலக்கல்வி வரலாற்றை எடுத்துக்கொண்டால் இடைக்காலத்தில் ஏறத்தாழ 70களில் இருந்து கால் நூற்றாண்டு காலம் வரையும் ஏன் இன்றுங் கூட ஆங்கில மொழியில் பாடநூல் உபயோகம் இல்லை.

வெறுமனே வழிகாட்டி நூல்களே கற்பிக்கப்பட்டு வந்தன,வருகின்றன. 50களின் பிற்பகுதியில் சாள்ஸ் டிக்கின்சின் (Tale of two cites) இரு நகரங்களின் கதை, சேர் ஆர்த்ர கொனென்டொயிலின்த வயிற் கொம்பனி(Sir arthur conan doyle இன் (The white company) ஆர்.எஸ்.ஸ்ரி வின்சனின் (Treasure Island) மணிபல்லவம்/ புதையல்தீவு போன்ற பாட நூல்களுடன் (The plate of gold) தங்கத்தட்டு,(The on freedom way) சுதந்திரத்தின் வழியில் முதலான செய்யுள் நூல்களும் கற்பிக்கப்பட்டு வந்தன. இவை யாவும் சுவாரசியமான கதைகளும் நயத்தரு கவிதைகளும் கொண்டவை. இவற்றிற்குப் புறம்பாகத் தனியாக ஆங்கில இலக்கணம் கற்பிக்கப்பட்ட போதும் இவை மேற்கூறிய நூல்களுக்குத் துணையானதே தவிர பிரதானமாக இருக்கவில்லை. மொழி அறிந்ததன் பின்னரே இலக்கணம் கற்கப்படவேண்டும். “ஒரு மொழியின் இலக்கணம் என்பது அம்மொழியைப் பேசுபவரிடையே திணிக்கப்படும் ஒரு தொகுதி விதிகள் அல்ல. மாறாக ஒரு மொழியை மக்கள் எப்படிப் பேசுகிறார்கள். எப்படிப் பொருள் கொள்கிறார்கள். என்பது பற்றி நீண்டகாலம் அவதானத்தின் பின்னர் பதிவு செய்யப்படும் ஒழுங்கு முறையே இலக்கணமாகும்.” (The Grammar of a language is not a list of rules forced on the people when speak it. It is just a record made by careful observation of how people speak the language - English for foreign students - book three By: C.E. Eckersley)

மேற்கூறிய விடயங்களில் இருந்து ஆங்கில மொழியைச் சரளமாகப் பேசக்கூடிய ஆசிரியர்களால் மட்டுந்தான் ஆங்கில மொழியைக் கற்பிக்க முடியும் என்பது வெள்ளிடைமலை. ஒரு மொழியை இன்னொரு மொழி மூலம் கற்பித்தல் என்பது சாத்தியமான ஒன்றல்ல ஏனெனில் மொழி என்பது ஒரு கலாசாரம். யாழ்ப்பாணத்தில் மொழி ரீதியான தோல்வியெனில் ஆங்கிலமொழி படுபாதாளத்தில் வீழ்ந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். க.பொ.த.சாதாரண தரத்தில் 2007இல் யாழ்.கல்வி வலயத்தில் ஆங்கில மொழியில் சித்தியடைந்தோர் 45% இலும் குறைவு என்பதை ஒரு சான்றாகக் கொள்ளலாம். இதற்கான காரணம் யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய பாடசாலைகளில் கூட அந்தந்த வகுப்புக்களுக்கு ஏற்ப அடிப்படை ஆங்கில இலக்கணம் (Rudiments of English Grammar) ஒரு போதுமே போதிக்கப்படுவதில்லை. மிக வேதனைக்குரிய விடயம் யாதெனில் ஆங்கிலப் பாடநூல்கள் வெறுமனே வழிகாட்டி நூல்களே ஒழிய பாடநூல்கள் அல்ல வென்பதை ஆங்கில ஆசிரியர்கள் கூட உணர்வதில்லை. வழிகாட்டி நூலைக் கற்பித்து விட்டு பாடத்திட்டம் முடிவடைந்துவிட்டது எனத் திருப்தி கொள்கிறார்கள். மொழி கற்பிப்பதற்குக் கட்டுப்பாடு இல்லை. 10 வருட ஆங்கிலக் கல்வியின் பின்னர் இலக்கண வழுவின்றி ஒரு எளிமையான ஆங்கில வசனத்தையேனும் எழுதக் கூடியநிலையில் தமிழ்மொழி மூல மாணவர் மட்டுமல்ல ஆங்கில மொழி மூல மாணவர்களே இல்லையென்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதற்கான பொறுப்பை ஆங்கில ஆசிரியர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(வளரும்)

திருஞானமுருகேசன், ஆங்கில ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA
(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

உச்சரிப்பு சரியாக அமைவதற்கு சொற்களின் உச்சரிப்பை பிரிப்பதை (Syllable) என அழைப்பர். அதற்கிணங்க முக்கியமான சொற் களை கீழே காணலாம். இவை Day to Day Conversation நாளாந்த பாவனை வாக்கியங்களில் வரும். இவற்றைப் பலமுறை படித்து பழக்கப் படுத்திக்கொள்ளவும்.

22.05.2009 Continuity.....

| | சொற்கள் | பிரிப்பு | உச்சரிப்பு | கருத்து |
|---|---|---|---|---|
| 479. | Needless | Need - less | நீட்லிஸ் | தேவையற்ற |
| 480. | Negative | Neg - a - tive | நெகரிவ் | எதிர்மறை |
| 481. | Neglect | Neg - lect | நிக்ளெக்ட் | கவனியாதிரு |
| 482. | Negotiate | Ne - go - ti - ate | நிகோஷியட் | கூடிக் கலந்து பேசு |
| 483. | Neighbour | Neigh - bour | நேபர் | அயலவர் |
| 484. | Neither | Nei - ther | நைதர் | இதுவும் அதுவும் அல்லாத |
| 485. | Nephew | Neph - ew | நெபியு | உடன்பிறந்தவரின் மகன் |
| 486. | Network | Net - work | நெட்வேக் | வலையமைப்பு |
| 487. | Nevertheless | Nev - er - the - less | நெவர்தலெஸ் | இருந்தபோதிலும் |
| 488. | Newsletter | News - let - ter | நியூஸ்லெட்டர் | செய்தி மடல் |
| 489. | Newsmonger | News - mon - ger | நியூஸ்மொங்கர் | வம்பளப்பவர் |
| 490. | Newspaper | News - pa - per | நியூஸ்பேப்பர் | செய்தித்தாள் |
| 491. | Nickname | Nick - name | நிக்நேம் | செல்லப்பெயர் |
| 492. | Nightingale | Night - in - gale | நையிட்டிங்கல் | ஒருவகைப் பறவை |
| 493. | Nightly | Night - ly | நையிட்லி | இரவுதோறும் |
| 494. | Nighty | Night - y | நைட்டி | இரவு உடை |
| 495. | Nobility | No - bil - i - ty | நோபிலிட்டி | உயர்பண்பு, பெருந்தன்மை |
| 496. | Nobody | No - bod - y | நோபொடி | ஒருவரும் இலர் |
| 497. | Nonentity | Non - en - ti - ty | நொன்னென்டிட்டி | மதிப்பற்றவர் |
| 498. | Nonsense | Non - sense | நொன்சென்ஸ் | பொருளற்ற சொல் |
| 499. | Normalize | Nor - mal - ize | நோமலைஸ் | வழக்கமான நிலைக்குக் கொண்டுவா |
| 500. | Northern | North - ern | நோதேன் | வடக்கிலுள்ள |
| 501. | Notability | No - ta - bil - i - ty | நோட்ரபிளிட்டி | முக்கியமானவர் |
| 502. | Notable | No - ta - ble | நோட்டபிள் | குறிப்பிடத்தக்க |
| 503. | Notation | No - ta - tion | நோட்டேஷன் | இசை குறிமானம் |
| 504. | Nothing | Noth - ing | நதிங் | எதுவுமில்லை |
| 505. | Nothingness | Noth - ing - ness | நதிங்னெஸ் | எதுவுமில்லா நிலை |
| 506. | Notification | No - ti - fi - ca - tion | நோட்டிபிகேசன் | தெரியப்படுத்தல் |
| 507. | Notifyy | No - ti - fy | நோட்டிபை | தெரியப்படுத்து |
| 508. | Notion | No - tion | நோஷன் | எண்ணப்போக்கு |
| 509. | Not withstanding | Not - withstand - ing | நொட் வித்ஸ்ரான்டிங் | இருந்தபோதிலும் |
| 510. | Novelette | Novel - et - te | நொவலெட்டி | சிறுநாவல் |
| 511. | Nowadays | Now - a - days | நவ்வடேஸ் | தற்காலத்தில் |
| 512. | Nowhere | No - where | நோவெயர் | எங்குமில்லை |
| 513. | Nuisance | Nui - sance | நூசன்ஸ் | தொந்தரவு |
| 514. | Numerable | Nu - mer - a - ble | நூமரபிள் | எண்ணக்கூடிய |
| 515. | Numerical | Nu - mer - i - cal | நூமரிக்கல் | எண்ணியல் சார்ந்த |
| 516. | Nurse | Nurse | நேஸ் | தாதி |
| 517. | Nursery | Nurs - er - y | நேசரி | குழந்தைகள் கல்விகற்கும் இடம் |
| 518. | Nutshell | Nut - shell | நட்ஷெல் | மணிச்சுருக்கம் |
| 519. | Nylon | Ny - lon | நைலொன் | நைலோன் துணி |
| 520. | Oath | Oath | ஓத் | சத்தியம் |
| 521. | Obedience | O - be - di - ence | ஒபிடியன்ஸ் | கீழ்ப்படிதல் |
| 522. | Obey | O - bey | ஒபை | கீழ்ப்படி |
| 523. | Obituary | O - bit - u - ar - y | ஒபிச்சுஅரி | மரணச்செய்தி |
| 524. | Object | Ob - ject | ஒப்ஜெக்ட் | இலக்கு |
| 525. | Objection | Ob - jec - tion | ஒப்ஜெக்ஷன் | தடை |
| 526. | Objectivity | Ob - jec - tiv - i - ty | ஒப்ஜெக்டிவிட்டி | புறஉண்மை |
| 527. | Oblivial | Ob - liv - i - al | ஒப்ளிவியல் | மறக்கிற |
| 528. | Obscurity | Ob - scu - ri - ty | ஒப்ஸ்கியூரிட்டி | தெளிவற்ற நிலை |
| 529. | Observant | Ob - ser - vant | ஒப்சேவன்ட் | விழிப்போடு கவனிக்கிற |
| 530. | Observe | Ob - serve | ஒப்சேவ் | கருத்துடன் கவனி |
| 531. | Obtain | Ob - tain | ஒப்ரெயின் | பெற்றுக்கொள் |
| 532. | Occasion | Oc - ca - sion | ஒக்கேஷன் | தருணம் |
| 533. | Occupy | Oc - cu - py | ஒக்யூபை | குடியிரு |
| 534. | Occur | Oc - cur | ஒகர் | நிகழ் |
| 535. | Occurrence | Oc - cur - rence | ஒக்கரன்ஸ் | நிகழ்ச்சி |
| 536. | Ocean | O' - cean | ஒஷன் | கடல் |
| 537. | Offensive | Of - fen - sive | ஒபென்சிவ் | மனதைப் புண்படுத்துகிற |
| 538. | Offer | Of - fer | ஒபர் | விரும்பிக்கொடு |
| 539. | Offertory | Of - fer - to - ry | ஒபரரோறி | காணிக்கை |
| 540. | Officer | Of - fi - cer | ஒப்பிசர் | அதிகாரி |
| 541. | Official | Of - fi - cial | ஒப்பிசல் | அதிகாரம் சார் |
| 542. | Onion | On - ion | அன்யன் | வெங்காயம் |
| 543. | Onward | On - ward | ஒன்வேட் | முன்நோக்கி |
| 544. | Opening | O - pen - ing | ஒப்பினிங் | திறந்தவெளி |
| 545. | Opinion | O - pin - ion | ஒப்பின்யன் | கருத்து |
| 546. | Opportunity | Op - por - tu - ni - ty | ஒப்பரூனிட்ரி | சந்தர்ப்பம், தக்கதருணம் |
| 547. | Oppose | Op - pose | ஒப்போஸ் | தடைசெய் |
| 548. | Opposite | Op - po - site | ஒப்பசிட் | எதிர்மாறான |
| 549. | Orator | Or - a - tor | ஒறேட்டர் | சொற்பொழிவாளர் |
| 550. | Ordinary | Or - di - nar - y | ஓர்டிநறி | சாதாரணமான |
| 551. | Organize | Or - gan - ize | ஓகநைஸ் | ஏற்பாடுசெய் |
| 552. | Otherwise | Oth - er - wise | அதர்வைஸ் | வேறுவகையில் |
| 553. | Ownership | Own - er - ship | ஓணர்சிப் | சொந்தம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 554. | Painful | 554. | Painful | பெயின்புல் | வலி உண்டாக்குகிற |
| 555. | Painter | 555. | Painter | பெயின்ரர் | ஓவியர் |
| 556. | Palace | 556. | Palace | பலிஸ் | அரண்மனை |
| 557. | Palmyra | 557. | Palmyra | பல்மைரா | பனைமரம் |
| 558. | Paradise | 558. | Paradise | பரடைஸ் | சொர்க்கம் |
| 559. | Paragraph | 559. | Paragraph | பரகிறாப் | பந்தி |
| 560. | Parcel | 560. | Parcel | பார்சல் | பொதி |
| 561. | Parent | 561. | Parent | பேரன்ட் | தாய், தந்தை |
| 562. | Parliament | 562. | Parliament | பார்லிமெண்ட் | நாடாளுமன்றம் |
| 563. | Participate | 563. | Participate | பார்டிசிபேட் | பங்குபெறு |
| 564. | Particular | 564. | Particular | பேட்டிக்குலர் | தனிப்பட்ட |
| 565. | Partition | 565. | Partition | பார்டிஷன் | பகுதிகளாகப் பிரித்தல் |
| 566. | Partner | 566. | Partner | பார்ட்ணர் | பங்காளி |
| 567. | Party | 567. | Party | பார்ட்டி | அரசியல் கட்சி |
| 568. | Pass over | 568. | Pass over | பாஸ் ஓவர் | மெல்லத்தடவு |
| 569. | Pass-out | 569. | Pass-out | பாஸ்அவுட் | விட்டுச்செல் |
| 570. | Pass-in | 570. | Pass-in | பாஸ்-இன் | செலவழி |
| 571. | Pass-away | 571. | Pass-away | பாஸ்-எவே | இற, மறைந்துபோ |
| 572. | Pass-through | 572. | Pass-through | பாஸ்துறு | வழியாகச்செல் |
| 573. | Pavement | 573. | Pavement | பேவ்மெண்ட் | நடைபாதை |
| 574. | Payment | 574. | Payment | பேமென்ற் | பணம்கொடுத்தல் |
| 575. | Peaceful | 575. | Peaceful | பீஸ்புல் | அமைதிவாய்ந்த |
| 576. | Penalty | 576. | Penalty | பெனல்டி | தண்டனை |
| 577. | Peninsula | 577. | Peninsula | பெனிஞ்சுலா | தீவு |
| 578. | Pension | 578. | Pension | பென்ஷன் | ஓய்வூதியம் |
| 579. | Penicillin | 579. | Penicillin | பெனிசிலின் | மருந்துவகை |
| 580. | Pensioner | 580. | Pensioner | பென்ஷனர் | ஓய்வூதியம் பெறுபவர் |
| 581. | Pepper | 581. | Pepper | பெப்பர் | மிளகு |
| 582. | Peppermint | 582. | Peppermint | பெப்பர்மின்ட் | இனிப்புவகை |
| 583. | People | 583. | People | பீப்பிள் | மக்கள் |
| 584. | Peradventure | 584. | Peradventure | பெர்அட்வெஞ்சர் | தற்செயலாக |
| 585. | Perceive | 585. | Perceive | பெர்சீவ் | கண்டு, கேட்டு உணர் |
| 586. | Percent | 586. | Percent | பெர்சண்ட் | நூற்றின் பகுதி |
| 587. | Percentage | 587. | Percentage | பெர்சன்ரிஜ் | சதவீதம் |
| 588. | Percipient | 588. | Percipient | பெர்ஸிப்பியென்ற் | பார்க்கின்ற |
| 589. | Perfect | 589. | Perfect | பெர்பிக்ட் | முழுமையான |
| 590. | Perfection | 590. | Perfection. | பேர்பெக்ஷன் | முழுநிறைவு |
| 591. | Perform | 591. | Perform | பெர்போம் | செயற்படுத்து |
| 592. | Performance | 592. | Performance | பெர்போமன்ஸ் | செயல் நிறைவேற்றல் |
| 593. | Perfume | 593. | Perfume | பேர்பியூம் | நறுமணமூட்டு |
| 594. | Perhaps | 594. | Perhaps | பெர்ஹாப்ஸ் | ஒருவேளை |
| 595. | Permission | 595. | Permission | பெர்மிஷன் | அனுமதி |
| 596. | Permit | 596. | Permit | பேர்மிற் | அனுமதிகொடு |
| 597. | Personality | 597. | Personality | பேர்சனலிட்டி | தனி மனிதத் தன்மை |
| 598. | Pharmacist | 598. | Pharmacist | பார்மசிஸ்ட் | மருந்துக்கடைக்காரன் |
| 599. | Philosophy | 599. | Philosophy | பிலோசபி | தத்துவம் |
| 600. | Photograph | 600. | Photograph | போட்டேகிறப் | நிழற்படம் |
| 601. | Phrase | 601. | Phrase | பிறேஸ் | சொற்றொடர் |
| 602. | Picked | 602. | Picked | பிக்ட் | தேர்ந்தெடுக்கப்பட்ட |
| 603. | Pickle | 603. | Pickle | பிக்கிள் | ஊறுகாய் |
| 604. | Pillow | 604. | Pillow | பிலோ | தலையணை |
| 605. | Plantain | 605. | Plantain | பிளான்டின் | வாழைப்பழம் |
| 606. | Platoon | 606. | Platoon | பிளட்டூன் | படைப்பிரிவு |
| 607. | Playful | 607. | Playful | பிளேபுல் | விளையாட்டுத்தனமான |
| 608. | Plaything | 608. | Plaything | பிளேதிங் | விளையாட்டுப்பொருள் |
| 609. | Pleasant | 609. | Pleasant | பிளெஸெண்ட் | மகிழ்ச்சியான |
| 610. | Pleasure | 610. | Pleasure | பிளெஷர் | இன்பம் |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம்-20 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035, 021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக சாலை




## அகவிழி

முன்பள்ளி மாணவர்களின் பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் வெளிக்கொண்டு வருகின்ற மாத இதழ் "அகவிழி வெளிவந்துள்ளது.

முன்பள்ளிகளின் நோக்கம், அதனுடைய தேவைகள், என்பன பற்றியெல்லாம் கட்டுரை, நேர்காணல் ஊடாக பல கல்வியாளர்களின் கருத்துக்களை மிகவும் எளிமையான முறையில் "அகவிழி" தனது அகத்தில் தாங்கியுள்ளது.

அழகியல், பாலர்கல்வி, முன்பள்ளி ஆசிரியை, நடைமுறைகளும் பிரயோகங்களும், மாற்றுச் சிந்தனை எனப் பல்வேறு அம்சங்களுடன் "அகவிழி" மே மாதத்திற்குரிய இதழாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"அகவிழி" முன்பள்ளி சமூகத்திற்கு ஒரு "அக ஒளி".

## உள்ளம் பெருங்கோயில்




நாவற்குழி அறிவொளி மன்றத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வெளியிடப்பட்டுள்ள "உள்ளம் பெருங்கோயில்".... நூல் வெளிவந்துள்ளது.

சைவசமயம் சார் விழுமியக் கருத்துக்களை உட்பதிவாகக் கொண்டு நாவற்குழி அறவொளி மன்றத்தின் கடந்தகாலச் செயற்பாடுகளையும் தாங்கி "உள்ளம் பெருங்கோயில்" நூல் வெளிவந்திருக்கின்றது.

நாவற்குழி அறிவொளி மன்றத்தின் ஆன்மீகம்சார் பணியாக இந்த நூல் இலவசமாக வெளியிடப்படுவது மற்றுமொரு சிறப்பம்சத்தை பறைசாற்றி நிற்கிறது. 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்பதற்கிணங்க "உள்ளம் பெருங்கோயில்" நூல் வாசிக்கும் சைவ அடியார்களின் உள்ளத்தில் ஒரு தெய்வீக உணர்வினை வெளிப்படுத்தும் என்பதில் நம்பிக்கை கொள்ள லாம்.

"உள்ளம் பெருங்கோயில்" அறத்தைப் போதித்த பெரியார்களின் புகைப்படங்களையும், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முகப்புப் படத்தையும் முகப்பு அட்டையில் தாங்கியுள்ளமை சிறப்பாகும்.

## உடைந்த நினைவுகள், வெற்றியுடன்...






சமரபாகு சீனா-உதயகுமாரின் "வெற்றியுடன்..", "உடைந்த நினைவுகள்" ... எனும் இரண்டு கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன.

மரணமே வாழ்வாகிப்போன ஈழத்தமிழ் மக்களுக்கு.... சமர்ப்பணம் எனத் தொடங்கிய சீனா-உதயகுமார் தனது இரண்டு கவிதைத் தொகுப்பிலும் காதல் கவிதைகளை வடித்திருக்கிறார்.

காதல் உணர்வுகளைச் சொல்ல அவர் கையாண்ட கவிவரிகள் ஒரு வகையில் இளம் இதயங்களை ஈர்க்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன.

ஆனால் அவரது கவிதைப் பக்கங்களில் சினிமா நடிகர்களின், நடிகைகளின் முகங்கள் வெளிப்படுவதால் தன்னையறியாமலே சினிமாவுக்குள் திளைத்து விட்டாரோ? என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதொன்றாகிப் போனது. அதனைத் தவிர்த்திருந்தால் நன்றாக அமைந்திருக்கும் என்பதையும் சொல்லத் தோன்றுகிறது.

காலத்தின் தேவையறிந்து உணரப்பட்ட சில கவிதைகளையும் இதில் இணைத்திருந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும். இனிவரும் காலங்களில் அவ்வாறான ஆக்கபூர்வமான சிந்தனைகளுடன் இவரது கவிதைத் தொகுப்பு வெளிவந்தால் ஈழத்துக் கவிஞர்களில் இவருக்கும் ஒரு இடம் இருக்கும். வெற்றியுடன்... உடைந்த நினைவுகள்... வாசிக்கும் காதலர்களின் மனங்களின் பசுமை நினைவுகளை உண்டு பண்ணும்.

நூல்கள் இரண்டும் கவர்ச்சியாகவும் கையடக்கமாகவும் விளங்குகின்றன.

# நாட்டை இரண்டாக்க நினைத்தார் பிரபாகரன் அது இன்று தோல்வியிலேயே முடிந்துள்ளது

## கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு மே 29

ஐ.நாவும், ஐரோப்பிய அமைப்புகளும் இணைந்து இந்த நாட்டை இரண்டாகக் கூறுபோட உதவும் என்று நினைத்திருந்தார் பிரபாகரன். அது இன்று தோல்வியிலேயே முடிவடைந்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டி.யு. குணசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாத்தறை ராகுல கல்லூரியில் இடம் பெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையின் உள் விவகாரங்களில் வெளியார் தலையிடுவதை சீனாவும் ரஷ்யாவும் முற்றாக விரும்பவில்லை. ஐ.நா. வினதும் ஐரோப்பிய அமைப்புக்களினதும் தலையீடுகளை சீனாவும் ரஷ்யாவும் எதிர்த்து இலங்கை அரசுக்கு உதவி புரிந்து அதைத் தடுத்து நிறுத்தின. இல்லாவிடில் ஐ.நா. படைகளையே இங்கு அனுப்பியிருக்கும்.இந்த அமைப் புக்களின் கண்கள் இலங்கையின் எண்ணெய் வளத்தின் மீதே தங்கியிருந்தன.சீனா, ரஷ்யா இந்தியா போன்ற நாடுகள் எமது நாட்டின் பிரச்சினையை அவர்களே தீர்த்துக் கொள்ளட்டும்.அதற்கான உதவிகளை நாம் வழங்குவோம்.உள்நாட்டு விவகாரங்களில் நாம் தலையிட மாட்டோம். என்ற நிலைப்பாட்டில் இருந்தன.

மாவிலாற்றில் பிரபாகரன் ஏற்படுத்திய யுத்தமே இவரது அழிவுக்கு காரணமாகும். இவர் யுத்தத்தை ஆரம்பிக்க எமது படையினர் அதற்கு முகம் கொடுத்தனர். எமது படையினரை விடப் புலிகளிடம் கூடியளவு ஆயுதங்கள் இருப்பதைக் கண்டு நாமே பிரமித்துப் போனோம். இவ்வளவு நவீனரக ஆயுதம் புலிகளுக்கு எவ்வாறு எங்கிருந்து கிடைத்தது என்பதே இன்றைய கேள்வி.

பிரபாகரன் இன்று உயிருடன் இருந்திருந்தால் இன்னும் சொற்ப காலத்தில் தனது குறிக்கோளில் வெற்றியடைந்து நாட்டைப் பிடித்திருப்பார். அதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

எமது ஜனாதிபதியின் தூரப்பார்வையாலும் ஆளுமையாலும் இந்த நாட்டுக்கு வெற்றிகிடைத்து மக்கள் நிம்மதியாக இருக்கின்றனர்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது ஆயுதங்களை கீழேவைத்து சரணடையுமாறு ஜனாதிபதி விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுத்தார். அவர்களையும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைய வைக்க முயற்சித்தார்.சிறந்த எதிர்காலத்தை தமிழ் சகோதரர்களுக்கு பெற்றுக்கொடுக்கவே இந்த அழைப்பை ஜனாதிபதி விடுத்தார். படையினர் தியாகங்கள் செய்து பெற்ற வெற்றி மூலம் தமிழ் சகோதரர்களுக்கு மாத்திரமல்ல ஏனைய அத்தனை சமூகங்களுக்கும் ஒளிமயமான எதிர்காலத்தை ஜனாதிபதி பெற்றுக் கொடுப்பார். என்ற உறுதியான நம்பிக்கை அனைத்து மக்களினதும் உள்ளங்களிலும் வேரூன்றி விட்டது.- என்றார்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 30

சாவகச்சேரி சப்பச்சிமாவடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம், மே 30

தென் மட்டுவில் வேரற்கேணி கந்தசாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம், மே 30

வரணி வடக்கு, கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-236)

## நிர்வாகிகள் தெரிவு

மண்டுவில், மே 30

தென்மராட்சி கலைமன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது:

தலைவராக- க. கேதீஸ்வரன், செயலாளராக- வை.இராசரத்தினம், பொருளாளராக- இ.இரவீந்திரன், உப தலைவராக-க. மோகனராஜலிங்கம், உப செயலாளராக- வ.ஸ்ரீபிரகாஸ் அகியோருடன் 10 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (9-59)

* * *

மண்டுவில், மே 30

சாவகச்சேரி வரியிறுப்பாளர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

டச்சு வீதி அகிலாண்டம் ச.சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி அங் குரார்ப்பண வைபவத்தில் நகரசபையின் 11 வட்டாரங்களிற்கும் 11 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் இருந்து நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவற்றின் விவரம் வருமாறு:-

தலைவர்- ஞா.இன்பகரன், செயலாளர்- ம.விவேகானந்தன், பொருளாளர்- வே.பூபாலசிங்கம், உப தலைவர்- சி.சுப்பிரமணியம், உப செயலாளர்- ந.ஞானசேகரம், போஷகராக பொதுச் சபையிலிருந்து வை. பாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (9-59)

## ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஆசிரியர் கைநூல்கள்

யாழ்ப்பாணம், மே 30

தீவகக் கல்வி வலயத்தில் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் தரங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட ஆசிரியர் கைநூல்கள் வலயத்திற்கு வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நூல்களைப் பாடசாலைகள் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)

# பாதிப்புக்குள்ளான பெண்களின் மேம்பாட்டுக்காக உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிலையம்

யாழ்.மாவட்டத்தில் வீட்டு வன்முறை காரணமாக பெண்கள் பல பிரச்சினைகளை குடும்பத்தில் எதிர்நோக்குகின்றனர். இவ்வன்முறைகள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதை பல செயற்பாடுகள் மூலம் அறிய முடிகின்றது. 2005 ஆம் ஆண்டில் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒரு சட்டம் நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் இதன் தாக்கம் சமூக மட்டத்தில் சென்றடைந்ததாகத் தெரியவில்லை. பெரும்பாலான வன்முறைகள் பொலிஸ் நிலையங்களுக்கோ நீதிமன்றங்களுக்கோ முறைப்பாடு செய்யப்படாமல் மூடிமறைக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக மகளிர் அபிவிருத்தி நிலை யம் 2006 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அனுசரணையு டன் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான தரவுகளைப் பதிவுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டது. இதற்காக யாழ்.மாவட்டத்தில் 5 பிராந்திய நிலையங்கள் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், காரைநகர், சாவகச்சேரி, வடமராட்சி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு கணனி வசதிகளுடன் கள ஆய்வாளர்களின் மூலம் இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களுடைய தரவுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றது. இதற்காக கணனியில் வலையமைப்பு ஒன்றையும் அது உருவாக்கி உள்ளது. இதுவரை பதிவு செய்த தரவுகள் 1300 இற்கு மேற்பட்டதாகும்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களின் தரவுகளைச் சேகரிப்பதற்கு கிராம மட்டங்களில் உள்ள மகளிர் நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் மகளிர் அபிவிருத்தி நிலையத்துக்கு பல தகவல்களை வழங்கின.

யாழ்.மாவட்டத்தில் இந்த நிலையம் மூலமே முதன்முதலில் இவ்வாறான தகவல்கள் நிறுவன ரீதியில் சேகரிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கிராம மட்டங்களில் பெண்களுக்கான பல கருத்தரங்குகளை அது நடத்தி வருகின்றது. இதன் மூலம் கிராம மட்டத்தில் வீட்டு வன்முறைச் சட்டம் தொடர்பான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாடுகளைச் செய்வதற்கு வசதியாக இவர்கள் இலவச சட்ட ஆலோசனைப் பிரிவொன்றை செயற்படுத்தி வருகின்றனர். இதில் சட்டத்தரணி ஒருவர் பாதிக் கப்பட்ட பெண்களுக்காக கடமையாற்றுகின்றார். இவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் சட்ட நடவடிக்கை, பராமரிப்பு வழங்குதல், D.N.A பரிசோதனை போன்றவற்றிற்கு நிலையம் வழிகாட்டி வருகின்றது.

மேலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கூட்டுவதற்காக ஜனவரி 2009- மார்ச் 2009 வரை மகளிர் தினத்தை மையமாக வைத்து உள்நாட்டுப் பத்திரிகைகளிலும் இச்சம்பவங்களை மையமாக வைத்து இவர்கள் 21 கட்டுரைகளை எழுதி வன்முறைகளின் வடிவங்களை மக் களுக்கு எடுத்துக்காட்டி உள்ளனர். இந் நடவடிக்கைகளின் மூலம் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகள் சமூக மட்டத்தில் குறையக் கூடிய வாய்ப்பு உள்ளன. மேலும் இவ்வாறு பாதிப்பிற்கு உள்ளான பெண்களிற்கு வாழ்வாதாரத்திற்கான உதவிகளையும் போஷாக்கு வசதிகளையும் சிறுவர்களுக்கு கல்வி மேம்பாட்டிற்கான வசதிகளையும் இந்தநிலையம் செய்து வருகின்றது. தொடர்ந்தும் இந்த நிலையம் இவ்வாறான சேவைகளில் ஈடுபட்டு செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.




சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினரால் மாணவர் மத்தியில் கல்லூரியில் சேகரிக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் வன்னி மக்களுக்கு வழங்குவதற்கென "சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்திடம்" கல்லூரியில் வைத்து கையளிக்கப்பட்டது. இதில் பணியகத்தின் அருட்தந்தை பிரவின் மகேசனிடம் கல்லூரி அதிபர் அருட்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளார் மற்றும் இன்ரறக்ட் கழக பொறுப்பாசிரியர், இன்ரறக்ட் கழக தலைவர் ஆகியோரினால் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் நன்றி கூறுகின்றோம்

எமது வித்தியாலய தரம் -3
மாணவி பா. பவித்ராவின் இருதய
சத்திரசிகிச்சைக்கான நிதியினை அன்பளிப்புச்
செய்த வலிகாமம் கல்விவலயம், எமது
வலயத்துக்குட்பட்ட கோட்டக்கல்வி
அலுவலகங்கள், பாடசாலைகள், வித்தியாலய
பழைய மாணவர் சங்கம், எமது பிரதேச
நலன்விரும்பிகள், பிரதேச மக்கள்
அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம். ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

## நீங்காத நினைவலைகள்

மலர்வு 02 . 02 . 1938



உதிர்வு 10 . 06 . 2008

### அமரர் இராசா நேசரத்தினம் (கிளி)

திதி: அட்டமி

நீங்கள் எம்மை விட்டுச் சென்ற நாள்களை
கண்ணீருடன் எண்ணிப் பார்க்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்வதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அரசடி,
தொண்டைமானாறு.

நே.வசந்தமல்லிகா (வசந்தா).
மனைவி

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சபாநாயகம்



தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த சிவபாக்கியம் சபாநாயகம் (27.05.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாநாயகத்தின் அன்பு மனைவியும் சகுந்தலா, சபாரவீந்திரன், சபாரத்தினம், சத்தியசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆ.வேல்முருகன்(சேவையர்), கருணாவதி, கானசரஸ்வதி, இந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலதி ரவீந்திரநாத்(கனடா), மாதவன்-ரோகினி(லண்டன்), வாசுகி, பிருந்தா தேவமாலன் (கனடா), பிரதீஷ் வாசுகி(லண்டன்), சுகுணன் (கனடா), சௌமியா (கனடா) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாரும், அஜந்தி (கனடா), மிஜந்தி(கனடா), அபிரா(லண்டன்) ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் தும்ப ளையில் (27.05.2009) புதன்கிழமை நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றேன்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை,
பருத்தித்துறை

தகவல்:
சட்டத்தரணி சபா.ரவீந்திரன்
J.P.U.M.

(சி/558188)

### இராசையா தங்கவடிவேலு



செட்டித்தெரு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சாத்தாவத்தை, புலோலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தங்கவடிவேலு 27.05.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இலட்சுமிஅம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் சிவனேசன் (நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவகரன் (உள்ளூராட்சித் திணைக்களம், மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாதேவி, கருணாகரன் (ஆசிரியர், நிலாவெளி R.C, திருகோணமலை), கருணானந்தராசா (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), கருணாரத்தினம் (கிராம சேவையாளர், மாதகல்), திருவதனி (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மங்களகல்யாணியின் (ஆசிரியை - சாவகச்சேரி மகளிர் கல்லூரி) அன்பு மாமனாரும் சிவஞானசுந்தரம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்), சிவானந்தம் (இளைப்பாறிய தபால் தரம் பிரிப்பாளர், வவுனியா), சிவரூபராசா (கனடா), சிவனேஸ்வரி, சிவரஞ்சிதம், சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை. சுப்பாமடம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாத்தாவத்தை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
த.சிவனேசன்,
த.சிவகரன்.
0602216623, 0776158435

(85717)

## உதைபந்தாட்ட மேலங்கிகள் பாடசாலைகளுக்கு விநியோகம்

வலி. வடக்கு,மே 30

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் இளையோர் அபிவிருத்தி செயல்திட்டத்தின் கீழ் ஜேர்மனி நாட்டு பயிற்றுவிப்பாளர் கொல்பர் ஓபர் மனிஸ்சினால் வழங்கப்பட்ட உதைபந்தாட்ட மேலங்கிகள், சிம் காட்டுகள் என்பன பாடசாலைகளுக்கு இன்று வழங்கப்படவுள் ளன.

யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 20 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் பயிற்சி முகாமில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன. இன்றைய உதைபந்தாட்ட பயிற்சி முகாமில் பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. தேவநாயகம் கலந்து கொண்டு பயிற்சி முகாமில் கலந்து கொள்ளும் பாடசாலைகளுக்கு உரிய பொருள்களை வழங்கவுள்ளார்.

ஏற்கனவே ஒரு கட்டமாக யாழ். மாவட் டப் பாடசாலைகள் சிலவற்றிற்கு இப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இரண்டாம் கட்டமாக ஏனைய பாடசாலைகளுக்கும் இவை வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(203 - 86)

## நலன்புரி நிலையங்களில் உள்ள தரம் -5, தரம்-3 மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 30

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தரம்-5, தரம்-3 ஆகிய வகுப்பு மாணவர்கள் இவ் வருடம் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சி கல்வி வலயத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் மற்றும் ஜி.சீ.ஈ உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: A.S.S பாம்,
தியேட்டர் வீதி, இணுவில்

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையில் உள்ள Ford 19 xxxx இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள A/C கார் விற்பனைக்கு உண்டு.
Contact No -0777 557971

### தவறிவிட்டது

இல, 98, கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த வேதநாயகம் அர்ச்சனா என்பவரது தே.அ.அ (908072987V) மற்றும் இரு வங்கி அட்டைகள் அடங்கிய பேர்ஸ் கடந்த 25.05.2009 அன்று யாழ்ப்பாணம் சுப்பிரமணியம்பூங்காவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம் லிங்கநாதன் பிடைவையகத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P 021 222 8016

### மிருதங்கம் விற்பனைக்கு

புதிய தரமான மிருதங்கங்கள்
விற்பனைக்குண்டு
அல்பா மிருதங்கத்தொழிலகம்
க.இராசநாயகம்
இல.82/16, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு, அரியாலை

### தேவை

01.யாழ்.பிரதான வீதியில் இயங்கும்
"பிலிப்ஸ் நேசிங் ஹோம்"
02.யாழ்.நகர மத்தியில் இயங்கும்
"சன்றைஸ் மெடி கிளினிக்" என்பவற்றிற்கு
பின்வரும் வேலையாள்கள் தேவை.
01) வரவேற்பாளர்(பெண்)
02)Accountant Assistent (கணக்காளர்)
(ஆண், பெண்)
03)நிர்வாக மேற்பார்வையாளர்(Administrative officer)
யாழ்.மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள்
விரும்பத்தக்கது.
நேர்முகத் தேர்வு: 31.05.2009 (ஞாயிறு)
காலை 8.30-10.30 வரை
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30

வல்வை அ.மி.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பூ.சக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேற்படி பாடசாலையில் கல்விகற்ற அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204-70)

### நன்றி நவில்கின்றோம்

கரம் நீட்டி வரம் கேட்டேன்
நிறைவான வாழ்வு தந்தாய்
குழந்தை யேசுவே வேளாங்கன்னித்
தாயே நன்றி நவில்கின்றோம்
இறைவா உமக்கு நன்றி.

இறை அடியார்

### Sharing our deep Sorrows

We were shocked to hear the
untimely demise of
**Rev.Fr.Mariyampillai**
**Thatheyus Sarathjeevan**
We share our deep Sorrows
with all his beloved ones
May his soul rest in peace.

Co-ordinator
English Teacher (JRS)
(Thenmaradchy)

## 7ஆம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 18 ★ 07 ★ 1961



மறைவு 20 ★ 05 ★ 2002

### அமரர் இரத்தினம் பாஸ்கரன்

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
எம் குடும்பத்தின் குலவிளக்கே!
உம் இனிய வதனமும் நினைவுகளும்
எம்மைவிட்டு என்று நீங்காதைய்யா

சாந்தமஹால்,
அண்ணா சிலையடி,
கரணவாய்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(85716)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செல்வலட்சுமி முருகேசு

தோற்றம்: 16.06.1940 மறைவு: 30.04.2009

அன்பின் அருவியே
ஆசை அம்மாவே!
ஆயிரம் உறவுகள் இருந்தும்
ஆறவில்லை எம் மனங்கள்
எத்தனை யுகமானாலும்
அணையாத தீபமாய்
என்றும் ஒளிரும்
உன் நினைவலைகள்

கைதடி கிழக்கு, ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கைதடி.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 தீவிரவாத தலிபான் தலைவர்கள் குறித்து தகவல் தருவோருக்கு ரூபா பல கோடி சன்மானம்

## முன்னணி பத்திரிகைகளில் பாக். அரசு விளம்பரம்

இஸ்லாமாபாத், மே 30

21 தலிபான் தீவிரவாதத் தலைவர்களைப் பற்றி துப்புக் கொடுப்பவர்களுக்குப் பல கோடி ரூபா சன்மானம் வழங்கப்ப டும் என பாகிஸ்தான் அரசு, அவர்களின் படங்களுடன் விளம்பரம் செய்துள்ளது.

பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப் புற மாகாணத்திலுள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில், 'தெரீக்-இ-தலிபான்' அமைப்பு பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. இந்த இயக்கத்துக்கு எதிராக பாகிஸ்தான் அதிரடி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கையால் சீற்றமடைந்துள்ள இத்தீவிரவாதிகளால் புதன்கிழமை லாகூரில் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 45 பேர் கொல்லப்பட்டனர். மறுதினமான வியாழக்கிழமை பெஷாவார் நகரிலும் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 10 பேர் பலியாயினர். நூற்றுக்கு மேற்பட்டோர் காய மடைந்தனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து, தலிபான் தீவிரவாதிகளை முற்றிலும் ஒடுக்குவதற்குப் பாகிஸ்தான் உறுதி பூண்டுள்ளது. இதன் பொருட்டு தேடப்பட்டுவரும் 21 முக்கிய தீவிரவாதத் தலைவர்களின் தலைக்கு பாகிஸ்தான் விலை நிர்ணயித்து, விளம்பரம் செய்துள்ளது.

இத்தீவிரவாதத் தலைவர்களின் படங்களுடன், பாகிஸ்தான் அரசின் விளம்பரங்கள், பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் அனைத்து முன்னணிப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. ஸ்வாட் பள்ளத்தாக்குச் சண்டைக்கு மூளையாகச் செயற்படும் மதகுரு மவுலானா பஸ்லுல்லாவின் தலைக்கு அதிகபட்சமாக இலங்கை நாணயப் படி ரூபா 1 கோடியே 50 லட்சம் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தலிபான் செய்தித் தொடர்பாளர் முஸ்லிம்கான், முக்கிய தளபதிகளான காரி முஷ்டாக், மெக்மத் கான், பக்த் பர்சாந்த் ஆகியோரின் தலைக்கு தலா ரூபா 90 லட்சம் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது போல் மேலும் 16 முக்கிய தீவிரவாதிகளுக்கு பல லட்சம் ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 21 தீவிரவாதிகளுக்கும் சேர்த்து பல கோடி ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீவிரவாதிகளின் படங்களுடன் விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. விளம்பரத்தில், ''மண்ணில் கலவரத்தை பரப்பாதீர்'' என்னும் புனித குரானின் அறிவுரை மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

# ஹொண்டுராஸில் பூகம்பம்: நால்வர்பலி! வீடுகள் சரிவு!!

தெகுசிகல்பா, மே 30

மத்திய அமெரிக்க நாடுகளான ஹொண்டுராஸ், கவுதமாலா ஆகியவற்றை வியாழக்கிழமை, பூகம்பம் உலுக்கியது. ஹொண்டுராஸின் ரோட்டன் தீவில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. இதில் நான்கு குழந்தைகள் பலியானார்கள்.

கவுதமாலாவில் கட்டடங்கள் குலுங்கின. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வெட்டவெளிகளில் திரண்டிருந்தார்கள். சேதவிவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

இப்பூகம்பம் கடலுக்கடியில் மையம் கொண்டிருந்தது. இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.1 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது என அமெரிக்க தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.



வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையில் உள்ள யோன் பயோங் தீவுக்கருகில் தென்கொரிய கடற்படைச் சிப்பாய்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

# ஜோர்ஜிய தலைநகரில் மோதல்; பேரணியினர் மீது தடியடிப் பிரயோகம்!

''ஜோர்ஜியாவின் தலைநகரான ரிப்பிலிசியில், எதிரணியினர் வியாழக்கிழமை மேற்கொண்ட பிறிதோர் ஆர்ப்பாட்டப் பேரணி அடிதடியில் முடிவடைந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையே மூண்ட மோதலில் அநேகர் காயமடைந்தனர். ஒரு பொலிஸ் அதிகாரி கத்தியால் குத்தப்பட்டார்'' என அரச பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

''தலைநகரான ரிப்பிலிசியில் அமைந்துள்ள நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்செயலில் ஈடுபட முனைந்தார்கள். அவர்களைக் கலைக்க பொலிஸார் தடியடி நடத்தினர். இதையடுத்து, இரு சாராருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது'' என்றும் அப்பேச்சாளர் கூறினார்.

ஜனாதிபதி மிக்கெயில் சகாஷ் விலியை பதவி விலகக்கோரி, எதிரணி ஏப்ரல் 9 ஆம் திகதி அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி இயக்கத்தை ஆரம்பித்தது. மே 6 ஆம் திகதி பொலிஸ் நிலையமொன்றுக்கு வெளியே இடம்பெற்ற முதல் பேரணியிலும் அமளிதுமளி ஏற்பட்டது. இதிலும் பொலிஸாருக்கும், ஆர்பாட்டக்காரர் களுக்குமிடையே மோதல் மூண்டது. இரு தரப்பிலும் பெருந்தொகையானோர் காயமடைந்தனர்.

''ரஷ்யாவோடு கடந்த ஆண்டு ஏற்பட்ட பிணக்கை ஜனாதிபதி பாரதூரமாகக் கருதவில்லை. இரு நாடுகளுக்குமிடையிலான தகராறைத் தீர்க்க அவர் தக்கவகையில் செயற்படவில்லை. அத்துடன், ஜன நாயகத்தை ஒடுக்கி வருகிறார்'' என எதி ரணியினர் ஜனாதிபதி மீது குற்றஞ் சுமத் தியுள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதி மிக்கெயில் சகாஷ் விலி பதவி துறக்க மறுத்து வருகிறார். ''எனது பதவி கால எல்லை, 2013 ஆம் ஆண்டில் முடிவடைகிறது. அதுவரை பதவியைத் தொடர்வேன். எனது முடிவில் மாற்றமில்லை'' என அவர் அறிவித்துள்ளார்.

''ஜோர்ஜிய அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, அரசு இடைத் தேர்தலை நடத்த வேண்டும். இல்லையேல், எதிரணியுடன் பேச்சுகள் நடத்த வேண்டும்'' என இத்தருணத்தில் கடும்போக்கு கிறிஸ்தவ தேவாலய பீடம் அரசை வலியுறுத்தியுள்ளது.

''ஜோர்ஜியாவில் வீதி ஆர்ப்பாட்டங்கள் கைவிடப்பட வேண்டும். உடனடியாக இரு சாராரும் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். ஜோர்ஜியாவில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப, நிபந்தனைகளற்ற முறையில், புதிய மறுசீரமைப்புத் திட்டமொன்று மேற்கொள்ளப்படவேண்டும்'' என இரு சாராரையும், அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டறிக்கை ஒன்றின் வாயிலாக வலியுறுத்தியுள்ளன.

# ஈரானிய மசூதியில் குண்டு வெடிப்பு: 19 பேர் உயிரிழப்பு; 60 பேர் படுகாயம்

## கட்டடத்தின் ஒரு பகுதி தகர்வு

தெஹ்ரான்,மே 30

தென்-கிழக்கு ஈரானிலுள்ள மசூதியொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில், 19 பேர் பலியாயினர். அறுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என சிஸ்தான் - பலுசிஸ்தான் மாகாண ஆளுநர் அலி முஹமமத் அஷாத், அரச தொலைக்காட்சிச் சேவைக்குத் தெரிவித்தார்.

''மாகாணத்தின் தலை நகரான ஜாஹிடானில் அமைந்துள்ள அமிர் அல்- மொஹினிமசூதியில் மாலை நேரத் தொழுகை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் இக் குண்டு வெடித்துள்ளது. இதில் மசூதி சேத மடைந்துள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக சில ''பயங்கரவாதிகள்'' கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் மேலும் குண்டுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந் தமையும், விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது'' என்றும் அவர் விவரித்தார்.

''இக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒரு பின்தங்கிய பகுதியில் இடம்பெற்றுள்ளது. பயங்கரவாதிகளினதும், போதைப் பொருள் கடத்தல் கும்பல்களினதும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்றும் அவர் கூறினார்.

''குண்டுவெடிப்பில் அமிர் அல்-மொஹினி மசூதியின் ஒரு பகுதி தகர்ந்துவிட்டது. மீட்புப் பணியாளர்கள் பல சடலங்களை இடிபாடுகளுக்கடியிலிருந்து மீட்டார்கள். காயமடைந்து கிடந்த மக்களும் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள்'' என ஓர் அதிகாரி உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான இர்னாவுக்குத் தெரிவித்தார்.

ஷியாக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட ஈரானில், தென்-கிழக்குப் பகுதியில் சுனி முஸ்லிம்களே பெருமளவில் வசிக்கிறார்கள்.

# இந்திய - பாக். அமைதிப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம்

## பாக். வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

''புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்திய மத்திய அரசு, பாகிஸ்தானுடன் மீண்டும் அமைதிப் பேச்சுகளை ஆரம்பிக்குமென நான் நம்புகிறேன்'' என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி, பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் சரத் சபர்வாலிடம் தெரிவித்துக்கொண்டார்.

இந்திய மக்களவைத் தேர்தல் முடிவடைந்த பின்னர், இந்தியத் தூதர் சரத் சபர்வாலுவுக்கும், பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சருக்குமிடையே இடம்பெற்ற முதல் சந்திப்பு இதுவாகும்.

இச்சந்திப்பில் இரு தரப்பு உறவுகள், மும்பைத் தீவிரவாதத் தாக்குதல் பற்றிய விசாரணைகளுக்கான ஒத்துழைப்பு ஆகியவை உட்பட பல விவகாரங்கள் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

உலக அரங்கில்

# காஷ்மீரில் கல்லூரி மாணவிகளுக்கு தற்காப்புக் கராத்தே பயிற்சி

ஸ்ரீநகர், மே 30

காஷ்மீரில் தற்காப்புக்காக, பெண்களுக்கு கராத்தே பயிற்சி அளிக்கப்படுகிறது. காஷ்மீர் மாநிலம் தீவிரவாதிகளின் தாக்குதல்களால் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. குண்டுவெடிப்பு, வன்முறை ஆகியவற்றால் அப்பாவி மக்கள் பலர் பலியாகின்றனர். இது காஷ்மீர் மாநில பெண்களிடையே பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

அச்சத்தைப் போக்க காஷ்மீர் பெண்களுக்கு கராத்தே கற்றுத் தரப்படுகிறது. ஸ்ரீநகரில் பிளஸ்-1 படிக்கும் மாணவிகள் 50 இற்கும் மேற்பட்டோர் அங்குள்ள கராத்தே பள்ளிக்குச் சென்று கராத்தே கற்கிறார்கள்.

அவர்கள் தவறாது தினமும் கராத்தே கற்று வருகிறார்கள். ''கராத்தே பயிற்சி மன தைரியத்தை வளர்க்கிறது. பாதுகாத்துக் கொள்ள உதவுகிறது'' என மாணவிகள் தெரிவித்தனர்.

காஷ்மீரில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக கல்லூரி மாணவிகள், பள்ளி மாணவிகள் ஆகியோர் மீதான துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான கொடுமை 80 சதவீதம் அதிகரித்துள்ளது. எனவே, தற்காப்புக்காக பெண்கள் கராத்தே கற்பது அவசியம் என சமூக ஆர்வலர் முசாபர் அகமது கூறினார்.

ஸ்ரீநகரில் 30 இற்கும் மேற்பட்ட பெண்கள் பள்ளிகளில் கராத்தே கற்றுத் தரப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும்50 மாணவிகள் வரை கராத்தே கற்கிறார்கள்.

ஸ்ரீநகரில் சில நாட்களுக்கு முன் ரோமனா என்ற 16 வ்யது இளம்பெண் பலியானார். 2 இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து ரோமனா மீது மோதினார்கள். இதில் படுகாயம் அடைந்து ரோமனா உயிரிழந்தார். இது தொடர்பாக 2 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் ஸ்ரீநகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து மாணவிகளிடையே கராத்தே கற்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது.

# கடும் மழையால் பிரேஸிலில் அணை உடைப்பு: நால்வர் பலி; அநேகரைக் காணவில்லை!

சாவோபோலோ, மே 30

''வட-கிழக்குப் பிரேஸிலுள்ள பியாயுய் மாநிலத்தில் பெய்துவரும் இடைவிடாத கடும் மழையால் அணைக்கட்டொன்று உடைப்பெடுத்து, பாரிய சேதங்கள் விளைந்துள்ளன. கரைபுரண்டோடும் வெள்ளத்தில் சிக்கி இதுவரை நால்வர் பலியாகியுள்ளனர். பெருந்தொகையானோர் காணாமற் போயுள்ளனர்'' என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''இரு நகரங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. மூன்று மாடிக் கட்டடங்களின் மட்டம் வரை வெள்ளம் திரண்டு வந்தது. இது ஆழிப்பேரலையை நினைவூட்டுவதாக இருந்தது'' என மாநில ஆளுநர் வெலிங்டன் டயஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அணை உடைப்பெடுத்து கரைபுரண்டு வந்த வெள்ளத்தில் சிக்கி நால்வர் பலியாயினர். இவர்களில் இரு சிறுமிகளும் அடங்குவர். ஒரு சிறுமிக்கு 10 வயது. மற்றைய சிறுமிக்கு 12 வய்து. மற்றுமிருவரில் 72 வயது நபரொருவரும், 73 வயதான மூதாட்டியும் அடங்குவர்'' என மாநில அரசு அதன் இணையத்துக் கூடாகத் தெரிவித்தது.

''பெருந்தொகையான வீடுகள் அள்ளுண்டு போயின. தாழ்ந்த பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர், பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். பெருவாரியான விளைச்சல் நிலங்கள் பாழாகி விட்டன. பெருமளவிலான கால்நடைகள் மடிந்துள்ளன'' என அன்டோனியோ என்னும் குடியிருப்பாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு கிடைக்காவிடின் மீண்டும் பிரபாகரன் வழியில் ஈழப்போர் தொடரும்

## பழ.நெடுமாறன் ஆவேசம்



திருநெல்வேலி, மே30

இலங்கையில் மனித உரிமை மீறல் குறித்து விசாரிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களித்தமையை உலகத் தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

பிரபாகரன் உயிருடன்தான் உள்ளார். குறித்த நேரத்தில் அவர் வெளியே வருவார். இலங்கையில் அரசியல் ரீதியான தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் அவர் தலைமையில் ஈழப் போர் தொடரும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கூறினார்.

திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க வேண்டும் என அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் தீர்மானம் கொண்டு வந்தபோது அதற்கு எதிராக இந்தியா வாக்களித்தது.

அத்துடன், இந்தத் தீர்மானத்துக்கு எதிராக மற்ற சில நாடுகளையும் வாக்களிக்குமாறு இந்தியா வற்புறுத்தியுள்ளது. இந்தியாவின் இச்செயல், நேரு காலத்தில் இருந்து இந்திய அரசு பின்பற்றி வந்துள்ள கொள்கைகளுக்கு முரணானது.

மனித உரிமைகளை மீறி, இலங்கை இராணுவம் தமிழர்களை இனப் படுகொலை செய்துள்ளது. இந்திய அரசு அதற்கு ஆதரவாக செயற்பட்டிருப்பதை தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

பிரபாகரன் இறந்துவிட்டார் என சர்வதேசப் பொறுப்பாளர் பத்மநாதன் அறிவித்தார். இந்த அறிவிப்பை வெளியிட அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? பத்மநாதன் இலங்கையில் இல்லை. அவர் சர்வதேசப் பொலிஸார் தேடி வரும் ஒரு குற்றவாளி.

பிரபாகரனுடன் நின்று போரிட்ட புலிகள் இதைச் சொல்லியிருந்தால் நம்பலாம். அவர்கள் அதைப் பற்றிக் கூறவில்லை. பிரபாகரன் உயிருடன்தான் உள்ளார். குறித்த நேரத்தில் அவர் வெளியே வருவார். இலங்கையில் அரசியல் ரீதியான தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் அவர் தலைமையில் ஈழப் போர் தொடரும் - என்றார்.



டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த போர் விமானங்களுக்கான வான்வெளி எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாடு முறை என்ற புதிய பிரிவின் தொடக்கவிழாவில் கலந்து கொள்ள விமானப்படை தளபதி பாலி எச். மேஜருடன் கையசைத்து வரும் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணியையும், வான்வெளி கண்காணிப்புக்காக நவீன வசதியுடன் கூடிய ஐ.எல்.-76 ரக போர் விமானத்தையும் படத்தில் காண்க.




# ஐ.நா. சபையில் இலங்கைக்கு ஆதரவு: தமிழருக்கு இந்தியா மீண்டும் துரோகம்

## வைகோ குற்றச்சாட்டு

சென்னை, மே 30

ஐ.நா. சபையில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்ததன் மூலம், ஈழத் தமிழருக்கு இந்திய அரசு மீண்டும் துரோகம் செய்துள்ளது. உலகில் யாருக்கும் ஏற்படாத கொடுமை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மகாராஜா நகரில் நடந்த விழாவொன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஈழத்தில் நடைபெற்ற துயரங்களுக்கு இந்திய அரசு தான் காரணம். இலங்கைத் தமிழர்களை கருவறுக்கும் செயலுக்கு இந்திய அரசு துணை போகும்போது நாம் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதையிட்டு கவலையடைகிறோம்.

இந்திய விடுதலைக்கு முதலில் போராடியது தென்னாடுதான். அந்த வீரசரித்திரம் இந்த மண்ணுக்கு உண்டு. அப்படிப்பட்ட இந்த மண்ணில் இன்று தமிழ் உணர்வு அழிக்கப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் வரலாற்றில் இது ஒரு சிறிய இடைவெளி. நாடாளுமன்றத்தில் என் குரல் ஒலிக்காவிட்டாலும் மக்கள் மன்றத்தில் என் குரல் ஓங்கி ஒலிக்கும்.

இந்திய அரசு இப்போது மீண்டும் ஒரு தவறு செய்துள்ளது.

ஐ.நா. சபையில் நடந்த வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்குப் போட்டுள்ளது. உலகில் யாருக்கும் ஏற்படாத



கொடுமை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு இது தற்காலிக வெற்றிதான். அதுவும் இந்தியா உதவி செய்து ஆயுதங்களை, இராணுவத்தினரை அனுப்பியதால் கிடைத்த வெற்றி. கடந்த 5 மாதத்தில் மட்டும் ஒரு லட்சத்து 45 ஆயிரம் தமிழர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். மூன்றரை லட்சம் தமிழர்கள் பாதுகாப்பு இல்லாமல் உள்ளனர். இதிலிருந்து அவர்கள் விரைவில் மீளுவார்கள்.

பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். உண்மையில் பிரபாகரனை இலங்கை இராணுவம் சுட்டுக் கொன்றிருந்தால் மரபணு சோதனை நடத்தி இருக்கலாமே. இன்னும் பிரபாகரன் தந்தை வேலுப்பிள்ளை உயிரோடு இருக்கிறார். அப்படியிருந்தும் மரபணு சோதனை நடத்த ஏன் முன்வரவில்லை.

பிரபாகரன் மறுப்புத் தெரிவிக்கவில்லையே என்று கூறுகிறார்கள். மறுப்பு அறிக்கை வெளியிட அவர் என்ன அரசியல் கட்சியா நடத்துகிறார். அவரது குரல் வெளியே வந்தாலே அவரை அழிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

எனவே, நாங்கள் ஆராய்ந்து இந்த முடிவை வெளியே சொன்னோம் - என்றார்.

# 5ஆம் கட்ட ஈழப்போர் வெடிக்கும்!

## திருமா நம்பிக்கை

சென்னை, மே 30



புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார். இலங்கையில் தனித் தமிழீழத்தை அமைப்பதற்காக பிரபாகரன் தலைமையில் 5ஆம் கட்டப் போர் வெடிக்கும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னையில் வியாழக்கிழமை அமைதிப் பேரணி நடைபெற்றது.

பேரணியின் முடிவில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

பிரபாகரனைச் சுட்டுக் கொன்றோம் என இலங்கை அரசு பொய்ச் செய்திகளை பரப்புகிறது. உலக நாடுகளின் துணையோடு, சிங்கள இராணுவம் 5 முனைகளிலிருந்து தாக்கிய போதும், தான் நேசித்த மக்களை, மண்ணை பாதுகாப்பதற்காக உறுதியுடன் போராடியவர் பிரபாகரன்.

தனி ஈழத்தை அடைவதற்கான - பிரபாகரன் தலைமையிலான போர் தொடரும். அவர்கள் தங்களின் 5ஆம் கட்டப் போராட்டத்தைத் தொடங்குவது நிச்சயம்.

தமிழகத்தில் தனி ஈழப் போராட்டத்துக்கு ஆதரவான கட்சிகளையெல்லாம் ஒருங்கிணைத்து, தனி அணி அமைத்து தேர்தலில் போட்டியிடலாம் என முயற்சித்தேன். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை - என்றார்

பேரணியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

அமைதி முயற்சிக்காக சிங்கள இராணுவத்தை நெருங்கிய நடேசன், புலித்தேவன் உள்ளிட்ட தமிழர் தலைவர்கள் கொல்லப்பட்டமை குறித்துசர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இலங்கையில் கடத்தப்பட்ட இளம் பெண்கள், ஆண்களின் நிலை என்னவென்று தெரியவில்லை. போர்க் களத்தில் வைத்தியப் பணியில் ஈடுபட்ட 3 வைத்தியர்கள், புலிகளின் கடற்பிரிவு தலைவர் சூசையின் மனைவி, குழந்தைகள் சிங்கள இராணுவத்தால் கடத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்படுகின்றனர். கடத்தப்பட்டவர்களை மீட்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# 20 கொள்ளுப்பேரன், பேர்த்தியை பார்த்த 101 வயது பாட்டிக்கு நூற்றாண்டு விழா



சேலம், மே 30

சேலத்தில் 101 வயது பாட்டிக்கு நூற்றாண்டு விழாவை கொள்ளுப்பேரன், பேர்த்திகள் உள்ளிட்ட உறவினர்கள் நேற்றுமுன்தினம் கொண்டாடினர்.

சேலம் மிட்டாபுதூர் பிரியங்கா கொலனியைச் சேர்ந்தவர் புருசோத்தமன். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இவரது மனைவி அங்கம்மாள் (வயது -101). இவர்களுக்கு சகுந்தலா என்ற மகளும், கருணாநிதி, தரணிபதி, மோகன், சாகேதராமன் என்ற 4 மகன்களும் உள்ளனர்.

5 பேருக்கும் 17 மகன்கள், மகள்கள் உள்ளனர். இவர்களுக்கும் திருமணமாகி 20 கொள்ளுப் பேரன், பேர்த்திகள் உள்ளனர். கொள்ளுப் பேர்த்தி பிரியாவுக்குத் திருமணமாகி விட்டது.

இவ்வளவு பேரையும் பார்த்து விட்ட அங்கம்மாளுக்கு நூற்றாண்டு விழா கொண்டாட குடும்பத்தினர் முடிவு செய்தனர். இதையடுத்து வெளிநாடுகளில் இருந்து வந்த உறவினர்கள் உட்பட பலர் நேற்றுமுன்தினம் கூடி அவருக்கு வாழ்த்துத்தெரிவித்து, இனிப்பு வழங்கிக் கொண்டாடினர். பின்னர் குழுவாகப் படம் எடுத்துக்கொண்டனர்.

இதுகுறித்து பேரன் உமாசங்கர் (வயது - 42) கூறுகையில் -

அங்கம்மாள் தினமும் காலை அரை இட்லியும், மதியம் சிறிது சோறு, ஒரு வாழைப்பழம், இரவில் ஒரு வாழைப்பழமும் சாப்பிடுகிறார் - என்றார்.

# மக்கள் தீர்ப்பைக் கேவலப்படுத்துவதா? எதிர்க்கட்சிகளுக்கு முதல்வர் கண்டனம்



சென்னை, மே 30

தேர்தலில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பைக் கேவலமாக விமர்சிக்கக் கூடாது - என்று எதிர்க்கட்சிகளுக்கு முதல்வர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மீன்வளத் துறை அமைச்சர் கே.பி.பி. சாமி இல்லத் திருமணத்தை, சென்னையில் நேற்றுமுன்தினம் நடத்தி வைத்து பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

கடந்த 1991ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அதற்குப் பின்னர் பொதுத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் தி.மு.க. ஒரேயொரு இடத்தில் மட்டும் வெற்றி பெற்றது.

மற்ற தொகுதிகளில் தோற்றுப்போயும் கூட, வாக்குப் பெட்டியில் கோளாறு, வாக்குச் சீட்டில் கோளாறு, இயந்திரம் கோளாறு என்றெல்லாம் பைத்தியக்காரத்தனமாக நான் குழம்பிக் கொண்டிருக்கவில்லை. மக்கள் தீர்ப்பளித்து விட்டால், பின்னர் அதைப் பற்றி கேவலமாக விமர்சித்துக் கொண்டிருக்கக் கூடாது.

இயந்திரத்தில் கோளாறு என எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள். அவர்கள் வெற்றி பெற்றால் நல்ல இயந்திரம். தோற்றால் இயந்திரத்திலே கோளாறா?

எங்கள் சின்னத்துக்கு வாக்கைப் பதிவு செய்தால், அது உதயசூரியன் சின்னத்திலே விழுகிறது என்ற எதிர்க்கட்சிகளின் கருத்து என்ன அற்புதமான கற்பனை?

அப்படியென்றால், விழுந்ததில், ஒன்பது இடத்தில் உங்களுக்கு சார்பாக விழுந்ததே, மொத்தம் 28 இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. பா.ம.க. உள்ளிட்ட அ.தி.மு.க. கூட்டணி 12 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

அந்த 12 இடங்களில் மாத்திரம் வாக்குப் பதிவு இயந்திரத்தில் உங்கள் சின்னத்தில் பதிவு செய்தால், உங்கள் சின்னத்துக்கே விழுந்திருக்கிறதா? மற்ற 28 இடங்களில் உங்கள் சின்னத்துக்கு வாக்குப் பதிவு செய்தால், எங்கள் சின்னத்துக்கு விழுந்து விட்டதா?

தோற்றுப் போய்விட்ட எதிர்க்கட்சி நண்பர்களுக்குச் சொல்லி நான் கொள்வது, மனம் சோராதீர்கள். உற்சாகம் குன்றாதீர்கள். இவ்வளவுதான் நம்முடைய அரசியல் வாழ்க்கை என்று கணக்குப்போட்டு வீட்டுக்குள்ளே முடங்கி விடாதீர்கள். தொடர்ந்து எங்களைத் திட்டிக் கொண்டே இரு[illegible] தான் நாம் வளர்ந்[illegible] - என்றார்.

# தமிழகக் காங்கிரஸை வலுப்படுத்துவேன்


## ராகுல் தெரிவிப்பு

புதுடில்லி, மே 30

தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியை மேலும் வலுப்படுத்துவேன் - என்று அறிவித்தார் ராகுல் காந்தி.

டில்லியில் புதிய அமைச்சரவையில் மேலும் 59 உறுப்பினர்கள் பதவியேற்ற நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அப்போது செய்தியாளர்கள் ராகுலைச் சந்தித்து, நீங்கள் ஏன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை வேண்டாம் என்று கூறி விட்டீர்கள் என்று கேட்டனர். அப்போதுதான் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தும் முக்கியமான பணியைத் தான் மேற்கொள்ளப் போகிறார் எனத் தெரிவித்தார்.

பஞ்சாப் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாக ஏராளமான இளைஞர்களைச் சேர்த்தேன். பின்னர் இளைஞர் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் நடத்தினேன். அதன் விளைவு இப்போது காங்கிரஸ் கட்சி அங்கே பலமாகியிருக்கிறது. இளைஞர் காங்கிரஸ் கட்சியில்



நிர்வாகிகளாக இருந்தவர்களையே மக்களவை பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக்கினோம். கட்சிக்கு அங்கே சிறப்பான வெற்றி கிடைத்திருக்கிறது.

உத்தரப்பிரதேசம், பீகாரிலும் கட்சியை வலுப்படுத்த இதே உத்தியைக் கடைப்பிடிக்கப் போகிறேன். தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி வலுவிழந்து பல ஆண்டுகளாகிறது. தென்னிந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி வலுப்பெற்றால்தான் அகில இந்திய கட்சி என்பதை நிலைநாட்ட முடியும். தமிழ்நாட்டிலும் புதுவையிலும் சேர்த்து மொத்தம் 40 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. எனவே மெத்தனமாக இருக்க முடியாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அரசியல் கட்சிகளைத் தடைசெய்க

## அரசிடம் கோருகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, மே 30

புலிகளை யுத்த ரீதியாகத் தோற்கடித்தது போன்று அவர்களின் தமிழீழக் கொள்கையை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கவேண்டும். இதற்குத் தமிழீழக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் அரசியல் கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும் - இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட எம்.பி.தயாசிறி ஜயசேகர அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புலிகளின் தமிழீழக் கொள்கை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் அமைப்பு யுத்த ரீதியாக முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இனி புலிகள் என்ற ஓர் அமைப்பு இந்த நாட்டில் இல்லை. ஆனால் அவர்களின் தமிழீழக் கொள்கை இன்னும் தோற்கடிக்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு தமிழ் இளைஞர்கள் இலங்கை என்றொரு நாட்டில் வாழ்கிறார்கள் என்று உணரவில்லை. தமிழீழம் என்றொரு தனிநாட்டில் வாழ்வதாகவே உணர்கிறார்கள்.

இந்தப் பிழையான சிந்தனை தோற்கடிக்கப்பட வேண்டும். அனைவரும் ஒரு நாட்டு மக்கள் என்பதை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

தமிழீழக் கொள்கையை அரசியல் ரீதியாக முற்றாகத் தோற்கடிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச மட்டத்திலும் இக் கொள்கை தோற்கடிக்கப்பட வேண்டும். அதற்காக சர்வதேச நாடுகளின் உதவிகளை அரசு இராஜதந்திர ரீதியில் பெறவேண்டும். மொத்தத்தில் புலிகள் சர்வதேச மட்டத்தில் எல்லா வகையிலும் ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழீழக் கொள்கையை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கும் முன்னோடி நடவடிக்கையாக அக்கொள்கையின் அடிப்படையில் செயற்படும் அரசியல் கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும்.

யுத்தத்தின் பின்னரான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அரசுக்கு முழு ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம். ஆனால், அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபய வர்தன எமது ஆதரவு தேவையில்லை என்கிறார்.

மறுபுறம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட இந்நாட்டின் தலைவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டும் என்கிறார்.

இவ்வாறு அமைச்சர்கள் முட்டாள்தனமான கருத்துகளை வெளியிட்டுக்கொண்டிருக்கும் இந்த நிலையில் அரசுக்கு எமது ஒத்துழைப்பு வேண்டுமா இல்லையா என்று அரசு தெளிவாகச் சொல்ல வேண்டும் - என்றார். (சி)

# கலைப்பீடாதிபதி கிருஷ்ணராஜாவின் மறைவு பல்கலைக்கழகத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு

## துணைவேந்தர் இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம், மே30

கலைப்பீடாதிபதி சோ.கிருஷ்ணராஜாவின் மறைவு ஈடுசெய்ய முடியாததாகும். அவரது இழப்பினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் பெருந்துயரில் ஆழ்ந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன்.

அவர் தமது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

கடந்த 33 ஆண்டுகளாக எங்கள் பல்கலைக்கழகத்தின் புலமையாளராக மெய்யியல், கலை இலக்கியவிமர்சனத்துறையில் புதியஒளி பாய்ச்சிய கலைப்பீடாதிபதி சோ.கிருஸ்ணராஜாவின் இழப்பினால் பல்கலைக்கழக சமூகம் பெருந்துயரில் ஆழ்ந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம், மொஸ்கோ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மெய்யியல் பயில்வு தந்த அறிவுத் தெளிவுடன், பேராசிரியர் கைலாசபதி போன்ற எங்கள் புலமையாளர்களின் சகவாசத்தினாலும் அயராத அறிவுத் தேடலினாலும் தமிழுக்கு இவர் தந்த ஆக்கங்கள் பெறுமதியானவை.

அழகியல், இந்துக் கலைக்கொள்கை, விமர்சனமெய்யியல், சைவசித்தாந்தம் ஒரு பார்வை போன்ற இவரது நூல்களினால் தமிழ் சிந்தனை மரபு வளர்ந்தது.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாக, தெளிந்த சிந்தனையுடன் புதிய பல மேம்பாட்டுத்திட்டங்களை வகுத்து உயிர்ப்பாக இயங்கிய வேளை நேர்ந்த அவரது திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாதது - என்று உள்ளது. (அ-5)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கிருஷ்ணராஜா காலமானார்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா நேற்றுக் கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் மரணமானார். இறக்கும் போது அவருக்கு வயது 62.



சில காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம் இரவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். நேற்றுப் பிற்பகல் அங்கு மரணமானார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 32 வருட காலமாக பல்வேறு பதவிகளை வகித்தவர் பேராசிரியர் கிருஷ்ணராஜா. மெய்யியல் துறைத்தலைவராக நீண்ட காலம் பணிபுரிந்தவர்.

மருதனார்மடத்தை சொந்த இடமாகக் கொண்ட இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். அதன் பின்னர் மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் மெய்யியல்துறையில் கலாநிதி பட்டம் பெற்றார். இடது சாரிக்கொள்கைப்பற்றாளனான கிருஷ்ணராஜா அந்தக் கொள்கையை பரப்புவதில் ஈடுபட்டுவந்தார். பல்வேறு ஆக்கங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். மிக அமைதியும் அடக்கமும் நிறைந்தவர் பேராசிரியர். கல்விப்புலத்தில் அரிய பணிகளைச் செய்தவர். (அ-1)

## தமிழக துணை முதல்வராக மு.க. ஸ்டாலின் நியமனம்



தமிழகத்தின் துணை முதல்வராக உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதல்வர் கருணாநிதியின் பரிந்துரையின் பேரில் இந்நியமனம் இடம்பெற்றது என ஆளுநர் மாளிகையால் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்வர் கருணாநிதி வசமிருந்த பொது நிர்வாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், தொழில், சிறுபான்மையினர் நலன், கடவுச்சீட்டு, சமூக சீரமைப்பு ஆகிய துறைகளையும் இனிமேல் மு.க.ஸ்டாலின் கவனிப்பார் எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே, உள்ளாட்சி மற்றும் ஊரக மேம்பாடு ஆகிய துறைகளை ஸ்டாலின் கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் கிருஷ்ணராஜாவின் மறைவு கல்விச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும்

## முன்னாள் துணைவேந்தர் அனுதாபம்

யாழ்ப்பாணம், மே 30

பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜாவின் மறைவு துயரம் மிக்கதாகும். பல்கலைக் கழக சமூகத்துக்கும் கல்விச் சமூகத்துக்கும் பெரும் இழப்பாகும்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1970 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் விரிவுரையை ஆரம்பித்த அவர் 1975 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் இணைந்து படிப்படியாக பல பதவி உயர்வுகளைப்பெற்று 2007 இல் கலைப் பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கலைப்பீட கற்கைநெறி விருத்திக்கும் மாணவர் நலன்களை மேம்படுத்தவும் விரிவுரையாளர்களின் ஆற்றல் மேம்பாட்டுக்கும் பௌதிகவள விருத்திக்கும் பெரும் பணியாற்றியவர். அன்னார் குறுகிய காலமே பீடாதிபதியாகப் பணிபுரிந்த போதிலும் நிறைவான பணியைச் செய்தார்.

கொழும்பு, பேராதனை வளாகங்களில் 1966-1970 காலத்தில் எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய மாணவனாகவும் பின் சக பல்கலைக்கழக விரிவுரையாளருமாக விளங்கிய பேராசிரியர் கிருஷ்ணராஜாவின் மறைவு மிகவும் துயரமிக்கதாகும் - என்றுள்ளது. (அ-1)

# வன்னி மோதல்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்களிலிருந்து உயிர் தப்பியவர்களின் சாட்சியங்கள் மற்றும் மோதல் நடைபெற்ற பகுதிகள் மீது ஹெலிக்கொப்டரில் சென்றவேளை எடுக்கப்பட்ட புகைப்படங்களை நிபுணர்கள் ஆராய்ந்ததில் வெளிவந்த முடிவுகள் ஆகியவை விடுதலைப் புலிகளுக்கு மனித கேடயங்களாக விருப்பமின்றி செயற்பட்டவேளை, பலர் பலியாகியுள்ளனர் என்பதை உறுதி செய்கின்றன.

**பாதுகாப்பு வலயம் கொலைக்களமாகியது**

பொதுமக்களுக்கு புகலிடம் அளிக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயம் அதற்கு மாறாக மோதலில் சிக்கிய ஆயிரக்கணக்கானவர்களின் கொலைக்களமாக மாறியது.

ஐ.நா. ஆவணங்கள் மூலம் கசிந்த தரவுகள், இவ்வருடம் முதல் நான்கு மாதங்களில் 7 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை உறுதி செய்துள்ளன.

மே 19 ஆம் திகதி வரை 13 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த திகதிக்கு முதல் நாளே விடுதலைப் புலிகளின் தலைவரின் மரணம் குறித்து அறிவிக்கப்பட்டது.

மே மாதத்தில் தீவிர மடைந்த கடுமையான ஷெல் தாக்குதல்களின் அடிப்படையிலேயே இந்த புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன.

இந்த புள்ளிவிவரங்கள் முழுமையானவை அல்ல. உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதி கரிக்கலாம் என ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**மக்கள் தப்ப முயன்றவேளை புலிகள் சுட்டுக்கொன்றனர்**

ஏப்ரல் மாத இறுதிப் பகுதி வரையான ஐ.நாவின் புள்ளிவிவரங்களின்படி ஜனவரியில் இரண்டு வீத மரணங்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும், 80 வீதமானவை ஷெல் வீச்சினாலும் இடம்பெற்றுள்ளன. வெளியேற முயன்ற பொதுமக்கள் பலரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.



மோதல் நடைபெற்ற பாதுகாப்பு வலயப் பகுதிகளை 'த ரைம்ஸ்' பத்திரிகையின் ஊடகவியலாளர் ஹெலிக்கொப்டரிலிருந்து பார்வையிட்டவேளை எடுத்தபடம்.

பெப்ரவரியில் 15 வீதமான மக்கள் துப்பாக்கிப் பிரயோகத்திலும், 64 வீதமானவர்கள் ஷெல் வீச்சிலும் இறந்தனர். மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து பெரும் அளவில் பொதுமக்கள் தப்ப முயன்ற வேளை இது இடம்பெற்றது.

மார்ச் முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதியில் ஷெல் வீச்சில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. நாளொன்றுக்கு 129 பேர் கொல்லப்பட்டனர்.

மோதல் நடைபெற்ற பகுதி மீது எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஆராய்ந்த சுயாதீன பாதுகாப்பு ஆய்வாளர்கள், விடுதலைப் புலிகளின் ஆயுதங்களின் சுடு எல்லை மற்றும் அப்பகுதியின் குறுகிய தூரத்தை கருத்தில் கொள்ளும்போது [illegible] பீரங்கிகள் [illegible] ரமே அவை பொதுமக்கள் இலக்குகளை தாக்கியிருக்கும் எனத் தெரிவித்தனர்.

சிலமோட்டார்கள் இலக்குத் தவறி சேதத்தை ஏற்படுத்தியிருக்கலாம். எனினும், இப்படி நடைபெறுவது ஆபூர்வமானது என முன்னாள் இராணுவ அதிகாரியும், பிரிட்டனின் ஆயுதப் படைகள் சஞ்சிகையின் ஆசிரியருமான சார்லெஸ் ஹெய்மன் தெரிவித் துள்ளார்.

**எயர் பேர்ஸ்ட் மோட்டர்கள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தலாம்**

விடுதலைப் புலிகளின் மோட்டார் நிலைகள் இலங்கை இராணுவத்தால் இலக்கு வைக்கப்பட்டு, பாரிய அழிவை ஏற்படுத்தக்கூடிய எயர் பேர்ஸ்ட் மோட்டார்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வகை மோட்டார்கள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தலாம் . மரங்கள் முற்றாக எரியுண்டு போகும்.

விடுதலைப் புலிகளிடம் இவ்வகை எயர் பேர்ஸ்ட் மோட்டார்கள் இல்லை என இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

**எதிர்பார்த்ததைவிட அதிக இரத்தக்களரி**

ஏப்ரல் மாதத்தின் இறுதி ஐந்து நாள்களையும் அடிப்படையாக வைத்து மே மாதத்தில் நாளொன்றுக்கு 341 பேர் கொல்லப்பட்டனர் என ஐ.நா. மதிப்பிட் டிருந்தது.

எனினும், எதிர்பார்த்ததைவிட அதிகளவு இரத்தக்களரி ஏற்பட்டது. [illegible] வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட சடலங்கள், மருத்துவர்கள், மத குருமார், மனிதாபிமான பணியாளர்களின் தகவல்கள் மூலம் ஏப்ரல் மாத இறுதி வரை கொல்லப் பட்டவர்களின் புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்டன.

இவ்வாறு பலியாகினர் என கணிப்பிடப்பட்டவர்களில் 19 வீதமானவர்கள் சிகிச்சை பெறும்போது மரணமானவர்கள். ஒரு நாளில் மட்டும் 198 பேர் பலியானார்கள். இவர்களில் 39 பேரின் சடலங்கள் மாத்திரம் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டன.

மே 13 ஆம் திகதி வரையிலான 4 நாள்களில் நாளொன்றுக்கு 220 சடலங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன. மிக மோசமான ஒருநாளில் 480 சடலங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டன.

நாளொன்றுக்கு ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஐ.நா. கருதுகிறது.

மே 13 ஆம் திகதி குண்டுத் தாக்குதல்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சடலங்களை எண்ணுவது கைவிடப்பட்டது.

**3,000 பேருக்கு என்ன நடைபெற்றது என்பது தெரியாது**

மருத்துவப் பணியாளர்கள் வெளியேறிய வேளை வைத்தியசாலையில் கைவிடப்பட்ட 3 ஆயிரம் பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது.

இப்படி 'த ரைம்ஸ்' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

மோதல்களில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை முன்னர் தெரிவிக்கப்பட்டதை விட மூன்று மடங்கு அதிகம் என்றும் அனேகமானவர்கள் அரச படைகளின் தாக்குதல்களிலேயே பலியாகினர் என்பது தமது செய்தியாளர்கள் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தெரிய வந்தது என்றும் 'த ரைம்ஸ்' மேலும் தெரிவித்தது

மோதல் நடைபெற்ற பகுதியில் எடுக்கப்பட்ட படங்களையும் அது பிரசுரித்திருந்தது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதலுக்கு அப்பால் இன்னமும் அரசு எம்மை அனுமதிக்கவில்லை

## ஐ.நா. பிரதிநிதி கூறுகிறார்

கொழும்பு, மே 30

மோதலால் இடம்பெயர்ந்துள்ள ஆயிரக் கணக்கான மக்களிடம் செல்வதற்கு இன்ன மும் அரசு எமக்கு அனுமதியளிக்கவில்லை - என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதி விடப் பிரதிநிதி நீல் புகுனே தெரிவித்துள்ளார்.

மிக மோசமான சம்பவங்கள் குறித்து நாம் கேள்விப்படுவதைஇதன் காரணமாக எம்மால்- உறுதி செய்யமுடியாமலுள்ளது என அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக எம்மை அங்கு அனுமதிக்க முடியாது என்று அரசு தெரிவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா அகதி முகாம்களில் உள்ள மக் களை நீண்ட நாள்களுக்கு அங்கேயே வைத் திருக்காது முடியுமானவரை அவர்களை உடனடி யாக மீளக் குடியமர்த்த அரசு நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று கொழும் பில் உள்ள ஐ.நா.தூதரகம் கூறியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரை யாற்றிய ஐ.நாவின் இலங் கைக்கான வதிவி டப் பிரதிநிதி நீல் புகுனே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதிமுகாம்களில் உள்ள அகதி களுக்குத் தேவையான பொருள்களும் எம்மால் வழங்கப்பட்டுக்கொண்டு வருகின்றன.

ஆரம்பத்தில் அகதி முகாம்களுக்கு எமது வாகனங்கள் நுழைவதற்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. இப்போது அவை குறைந்து கொண்டு வருகின்றன. எதிர்காலத்தில் அக் கட்டுப்பாடுகள் முற்றாக நீங்கிவிடும் என்று நாம் நம்புகிறோம்.

ஆனால், எமது உறுப்பினர்கள் அங்கு சென்றுபணிபுரிவதற்குக்கட்டுப்பாடுகள்இல்லை. அங்கு உணவுப் பொருள்கள் தொடர்ச்சியாக அனுப்பப்படுகின்ற போதிலும் அவை மக்களுக்குப் போதுமானதாக இல்லை.

பொருள்கள் இன்னும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இறுதி ஆறு வாரங் களில் மாத்திரம் 2 லட்சத்து 20 ஆயிரம் மக் கள் முகாம்களுக்கு வந்ததால் மேலும் பொருள் களுக்குத் தட்டுப்பாடு நிலவும் என எதிர் பார்க்கப்படுகிறது.

உணவுப் பொருள்கள் உட்பட கூடாரங்கள், மருத்துவப் பொருள்கள் போன்றவை அதிக மாகத் தேவைப்படுகின்றன. எப்படி இருப்பினும், மக்கள் கூடிய விரைவில் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்புவதே மேல்.

முடியுமானவரை கூடிய விரைவில் அவர்களை மீளக்குடியமர்த்த அரசு நடவ டிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அம்மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படு வர் - என்றார். (சி)

## சென்.பற்றிக்ஸ் முன்னாள் அதிபர்

# பிரான்சிஸ் யோசப் அடிகளாரை 18 ஆம் திகதி முதல் காணவில்லை

## புது மாத்தளனில் தங்கியிருந்தவர்

யாழ்ப்பாணம், மே 30

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதி யில் தங்கியிருந்த வண.பிரான்சிஸ் யோசப் அடிகளாரை (வயது 70) கடந்த 18ஆம் திகதி முதல் காணவில்லை. அவரை கண்டுபிடித்து உதவுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

யாழ்.ஆயர் இல்லம் இந்தக் கோரிக் கையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடம் விடுத்துள்ளது.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் அதிப ராக முன்னர் கடமையாற்றி வந்த அடிகள் கல்விமேம்பாட்டுப்பணிகளில்ஈடுபட்டிருந்தார்.

நீண்டகாலமாக கிளிநொச்சியில் பணி யற்றிய அவர் இடம் பெயர்ந்து புதுமாத்தள னில் தங்கியிருந்தார்.

கடந்த 18ஆம் திகதி முதல் அவர் குறித்துத் தகவல் இல்லை. அவரைக் கண்டு பிடித்து உதவுமாறு ஆயர் இல்லம் செஞ்சிலு வைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவல கத்திடம் கோரியுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டது. (அ-1-6)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஆசிரியர்களுக்கு அங்குள்ள பாடசாலைகளில் தற்காலிக நியமனம்

யாழ்ப்பாணம், மே 30

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கி யுள்ள மாணவர்களுக்கு என அமைக் கப்பட்டுள்ள பாடசாலைகளில் அந்த நிலை யங்களில் தங்கியுள்ள ஆசிரியர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டமேலதிக மாகாணக் கல்விப்பணிமனையினர் இதற்கான நடவ டிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைகளில் கல்விபயி லும் மாணவர்களுக்கு கல்வி போதிக்க போதிய ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் -

வன்னியில் இருந்து வந்து யாழ். மாவட் டப் பாடசாலைகளில் இணைப்புப் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களில் ஒரு தொகுதி யினரையும் நலன்புரி நிலைய மாணவர் களுக்கு அமைக்கப்பட்டுள்ள பாடசாலை களுக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (அ-1-6)

## 200 புலி உறுப்பினர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அகதிகளுக்கான ஐ.நா.தூதர கத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதி நிதி அமீன் நவார்டே இத்தகவலைத் தெரிவித் தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள புலி உறுப்பினர்கள் தொடர்பாகத் தகவல்கள் திரட்டப்படுகின்றன. அந்த முகாம்களில் இருந்து 200 புலி உறுப்பினர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர் அவர்களின் பெற்றோரி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மிகுதியானோர் அம்பேபுஸ்ஸவில் உள்ள புனர்வாழ்வு முகாம் களுக்கு அனுப்பப்பட்டு அங்கு அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது.

அந்த அகதிமுகாம்களில் மேலும் புலி உறுப்பினர்கள் இருக்கலாம் என்று நம்பப் படுகிறது. அவர்களை இனங்காணும் நடவ டிக்கை தொடர்கிறது.

பெரும் எண்ணிக்கையிலான புலி உறுப் பினர்கள் மேலும் இனம் காணப்படுவர் என்று நாம் நம்புகிறோம். அவ்வாறு இனம் காணப் படுபவர்களை உடனடியாகப் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-சி)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாவிற்கு வருவார் என நாம் எதிர்பார்க்கி றோம். இந்தியாவில் அவருடன் பேச்சுகள் இடம்பெறும்.இலங்கையின் நெருக்கடிகள் தற்போது முடிவடைந்துள்ளன. அங்கு புனர் வாழ்வு நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளன. அது மிகப் பாரிய பணியாகும்'' - என்றும் கிருஷ்ணா கூறினார். (அ-சி)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைக் கவுன்ஸில் இது குறித்து ஆராயும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அந்தக் கவுன் ஸில் வேறு பாதையில் சென்று விட்டது. அத்தகைய ஒரு விசாரணை நடத்துவதை அங் கத்துவ நாடுகள் சிலவற்றால் சீரணிக்க முடி யவில்லை என்றும் ஹோம்ஸ் கூறினார்.

இதேவேளை -

ஐ.நாவின் பெயர் குறிப்பிட விரும்பாத மற்றைய உயர் அதிகாரி ஒருவர் முன்னைய உதாரணம் ஒன்றை எடுத்துக் கூறினார்.

காஸாவின் மீது இஸ்ரேல் இந்த வருட ஆரம்பத்தில் தாக்குதல் மேற்கொண்ட போது பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் இறந்தது குறித்து விசாரணை நடத்த மனித உரிமை கவுன்ஸில் அங்கீகாரம் வழங்கி யிருந்தது - என்றார்.

இலங்கையுடன் ஒப்பிடக்கூடிய நல்ல உதாரணம் காஸாவா கும். காஸாவில் நடப்ப வற்றை அச்சொட்டா கப் படம் பிடிப்பதற்கு தொலை தூர கமராக் கள் இயங்கிக் கொண் டிருந்தன. ஆனால் இலங்கையைப் பொறுத்த வரையில் அவ்வாறு தொடர்ச்சி யாக எந்தக் கமராவும் இயக்கப்படவில்லை. இவ்வகையில் காஸா வைவிட பத்து மடங்கு அழிவு இலங்கை யில் ஏற்பட்டிருக் கக் கூடும் - என்று அந்தப் பெயர் குறிப் பிட விரும்பாத அதிகாரி கூறினார். (அ-6)

# புலிகளின் ஊடகத் தொடர்பாளர் தயா மாஸ்டர் நேற்று நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன் னாள் ஊடகத் தொடர்பாளரான வேலாயுதம் தயாநிதி (தயா மாஸ்டர்) நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் சுமார் நான்கு மணிநேரம் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளித்தார்.

குற்றப் புலனாய்வுப் பொலிஸார் முதல் தடவையாக அவரை பலத்த பாது காப்புக்கு மத்தியில் நீதிவான் முன் ஆஜர் செய்தனர்.

நீதிவானின் அறையில் பிரசன்னமாகி தயா மாஸ்டர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

சுய விருப்பின் பேரில் அவர் வாக்கு மூலம் அளித்தார் எனக் கூறப்பட்டது.

இதேவேளை - குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் முன்னரே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை யின் பிரகாரமும் பாதுகாப்பு அமைச்சினால் ஏற் கனவே விடுக்கப்பட்ட தடுப்பு உத்தரவின் பேரி லும் அவரைத் தடுத்து வைக்குமாறு குற்றப்புல னாய்வுப் பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் படையினர் கைப்பற்றிய போது இவர் கடந்த மாதம் ஏப்ரல் 23 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ச்சுடன் இராணுவத்தினரிடம் சரண் அடைந்தது தெரிந்ததே. (அ-6)

## கே.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்த பிரத்தியேகத் தகவல் ஒன்றின் அடிப் படையிலேயே இக் கைது இடம்பெற்றுள் ளது. கைது செய்யப்பட்டுள்ள இவர் உருமாறன் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என வும் அது தெரிவித்துள்ளது.

இவர் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக 19 தடவைகள் நாட்டை விட்டு வெளியே சென்றுள்ளதுடன், சில தடவைகளில் சட்டவிரோதமாகப் படகுகளிலும் நாட்டி னுள் வந்துள்ளார் என்றும்-

இவர் வவுனியா முகாமில் இருந்த வேளையிலும் கே.பியுடன் செய்மதித் தொலைத் தொடர்பு மூலம் உரையாடியுள்ளார் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதன்மூலம் கே.பி. இப்போது மறைந்துள்ள இடத்தைக் கண்டுபிடிப்பது சுலபமாகிவிடும் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்திய - இலங்கை உடன்படிக்கை மூல மாக அரசமைப்புக்கான 13 ஆவது திருத் தம் உருவானது.

இதன் அடிப்படையில் உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட அணுகுமுறை இந்தியா வின் நிலைப்பாட்டையும் கவனத்தில் எடுக்கின்றது; கருத்தில் கொள்கின்றது.

இலங்கையின் ஒவ்வொரு நபரினதும் கருத்தையும் ஆராய்ந்த பின்னரே இம்முறை அரசியல் தீர்வு முன்வைக்கப்படும்.

### அரசியல் தீர்வின் உள்ளடக்கத்தை நாங்களே தீர்மானிப்போம்

சமாதானம் என்பது இலங்கையின் நன்மை குறித்த விடயம் என்பதால் அரசியல் தீர்வின் உள்ளடக்கம் குறித்து நாங்களே ஆராய்ந்து தீர்மானிப்போம்.

தென்னாசியாவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஒரு பகுதியையே நான் முன்னெடுத்துள்ளேன்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்ததன் மூலம் நான் இந்தியாவின் சார்பில் யுத்தத்தை முன்னெடுத்துள்ளேன்.

### என்னுடைய வெற்றியும் சோனியாவின் வெற்றியும் ஒரே தருணத்தில்....

இந்தியா என்ன நினைக்கின்றது என்பதை விட எனக்கு வேறு எதுவும் முக்கியமில்லை.

என்னுடைய வெற்றியும் சோனியா காந்தி யின் வெற்றியும் ஒரே தருணத்தில் நிகழ்ந்தன.

அவர் தேர்தலில் வெற்றிபெற்றதைப் பாராட்டி அவருக்கு நான் எழுதியுள்ளேன். இந்த யுத்தத்தில் இந்தியாவின் தார்மீக ஆதரவு முக்கியம்.

யுத்த வெற்றிக்காக தமிழ்நாட்டுத் தலை வர்கள் பலர் என்னைப் பாராட்டினார்கள்.

தமிழ்நாட்டுத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு என்ன நடந் தது என்பதைப் பாருங்கள். அவர்கள் அனை வரும் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டார் கள். தமிழ்நாட்டு மக்கள் இவர்களுக்குத் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர் - என்றார்.

## அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் தொடர்பு கொண்டு இது குறித்து பேசி உள்ளேன். கள நிலையை கருத்தில் கொண்டு உதவி வழங்குவதாக அவர்கள் உறுதி அளித்துள்ளனர். விரைவில் யாழ்ப் பாணம் செல்வேன் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை -

உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா மாவட்டத்துக்கான இணைப்பாளராக அமைச் சர் வி. முரளிதரன் நியமிக்கப்பட் டுள்ளார். விரைவில் அங்கும் செல்லவிருப்பதாக அமைச் சர் தெரிவித்துள்ளார். அதற்கு முன்னர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜ யந்தவை அடுத்தவாரம் சந்திக்க உள்ளதாக வும் அமைச்சர் முரளிதரன் மேலும் கூறினார்.

## 20 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட செய்தியை இலங்கை அரசு அடி யோடு மறுத்திருக்கிறது.

அந்தப் பகுதியில் ஷெல் வீச்சுக்களோ, கொலைகளோ இடம்பெறவில்லை என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத் தின் பணிப்பாளர் லக்ஷ்மன் குலுகல்ல தெரி வித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் பி.பி.ஸிக்குக் கூறிய வை வருமாறு-

'த ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்ட தக வலை முழுமையாக நம்பமுடியாது. அரசு இந்த மாதத்திலிருந்து கனரக ஆயுதங்களைப் பயன் படுத்துவதில்லை எனத் தீர்மா னித்தது. அதன் காரணமாக பாதுகாப்பு வலயத்தில் எந்த ஷெல் வீச்சுக்களும் இடம்பெறவில்லை.

பாதுகாப்பு வலயத்தில் ஏற்பட்ட சேதங் கள் குறித்து எடுக்கப்பட்ட படங்கள் போலி யானவையாக இருக்கலாம். அங்கிருந்து வெளியேறியோர் இதுகுறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

மோதல் இடம்பெற்ற பகுதிகளில் சடலங் கள் எவையும் மீட்கப்படவில்லை'' - என்றார்.

### அர்த்தமற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டது

இதேவேளை, அர்த்தமற்ற விடயங்களை அடிப்படையாக வைத்து 'த ரைம்ஸ்' பத்தி ரிகை தொடர்ந்தும் செய்திகளை வெளியிட்டு வருகின்றது - என வெளிவிவகார அமைச்சின் செயலர் பாலித கோகன்ன தெரிவித்துள்ளார்.

அந்தப் பத்திரிகை தொடர்ந்து இலங்கைக்கு எதிராக வெறும் கசப்புணர்வுப் பிரசாரங்க ளையே முன்னெடுக்கிறது.

வெறுக்கத்தக்க பயங்கரவாதக் குழு வொன்றை இலங்கை அரசு அழித்துள்ளது. மனி தக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்த இரண்டரை இலட்சம் பேரை அரசு தற்போது விடு வித்துள்ளது - என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில், கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம், அரசு விதித்துள்ள கட்டுப்பாடு காரணமாக உறுதியான இறுதிப் புள்ளி விவ ரங்களை வெளியிட முடியாமல் உள்ளது - எனத் தெரிவித்திருக்கிறது.

NEW YARL HOSPITAL
315, Palaly Road, Thirunelvely. T.P.2223533
பற்சிகிச்சை கிளினிக்
தினமும் பி.ப. 4 - 6 மணி
☆ பல் அடைத்தல்
☆ பாரம்பரிய முறை
☆ நவீன முறை
☆ பல் கட்டுதல்
☆ நிரந்தர பல் கட்டுதல்
☆ தற்காலிக பல் கட்டுதல்

☆ கிளிப் போடுதல்
☆ நிரந்தர கிளிப் போடுதல்
☆ தற்காலிக கிளிப் போடுதல்
☆ பல் சுத்தம் செய்தல்
☆ வேர்முகச் சிகிச்சை
☆ வாய் சம்பந்தமான நோய்கள்.

Engineer-MCSE
*Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
*செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்
*Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
*வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
*USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc
*தேர்ச்சி பெறும் அனைவருக்கும் Student Visa, Work Permit Carrier Guidance
கற்கும் அனைவருக்கும் Free Diploma in Hardware Technology, (Installation,Configuration,Printers, Trouble Shooting ,Networking,Assembling)
பதிவுகள் 01.06.2009 முன் நேரில்
MCS Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில். Bus Route - 764

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE,JAFFNA
2009 A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான துரிதமீட்டல்
உயிரின் தொடர்ச்சி
ஆரம்பம்:- 01.06.2009 (திங்கள்)
Batch - I-Mon,Wed-6.45-8.15
Batch - II-Sat,Sun-9.30-10.30
By - சு.பொன்திவாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.